பக்கங்கள்: 12 + IV = பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 03 ஞாயிற்றுக்கிழமை (20-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:327

# 'மானுடத்தின் தமிழ்க் கூடல்'

# நேற்று கோலாகல ஆரம்பம்!

## தமிழ், முஸ்லிம், சிங்கள இன அறிஞர்கள் திரண்டு பங்கேற்பு

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்20

**விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகம், நிதர்சனம் நிறுவனத்துடனும் தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002' நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று வெகு கோலாகலமாக ஆரம்பமாகியது.**

**தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கலை இலக்கியவாதிகள், படைப்பாளிகள், அரசியல்துறைப் பிரமுகர்கள் என்று சுமார் 2ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நேற்றைய நிகழ்வில் கலந்துகொண்டனர்.**

காலை 9 மணிக்கு விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் பாப்பா தேசியக் கொடியை ஏற்றி வைத்ததுடன் விழா ஆரம்பமானது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி விழாச் சுடரை ஏற்றினார்.

பின்னர் ..வலி.தென்கிழக்குப் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் காலை அமர்வு ஆரம்பமானது. அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் அவர் தனது தலைமையுரையை மும்மொழிகளிலும் ஆற்றினார்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வரவேற்புரை நிகழ்த்தினார். பேராசிரியர் கா. சிவத்தம்பி, தொடக்கவுரை நிகழ்த்தினார்.

'போர் இலக்கியம்' என்னும் தலைப்பில் நிலாந்தன் சிறப்புரை நிகழ்த்தினார்.

முற்பகல் 11 மணிக்கு 'கவிதை'

(12ஆம் பக்கம் பார்க்க)



நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமான 'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002' மாநாட்டின் தொடக்கத்தில் அகவணக்கம் செலுத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட படம் இது.

தமிழகத்திலிருந்து மாநாட்டுக்காக வந்திருந்த கவிஞர் இன்குலாப், எழுத்தாளர் பா.செயப்பிரகாசம், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் இரா.திருமாவளவன், இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், தமிழகத்தின் புகழ் பெற்ற ஓவியர் நாஸ்கி மருது ஆகியோர் அகவணக்கம் செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

*(மேலும் படங்கள் மூன்றாம் பக்கத்தில்)*

## தமக்கு தனி அலகு வேண்டும் என்ற முஸ்லிம் மக்களின் கோரிக்கை சமாதான முயற்சியை பாதிக்கும்

### நீதி அமைச்சர் லொக்குபண்டார கூறுகிறார்

முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு வேண்டும் என்று தற்சமயம் விடுக்கப்படும் கோரிக்கைகள் விடுதலைப் புலிகள் சுதந்திரமாகப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கு தடையாக அமையப்போகின்றன.

- இவ்வாறு நீதி அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

தனியார் வானொலி ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு வேண்டும் என்று தற்சமயம் குரல் எழுப்பப்படுகின்றது. இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை சிக்கலாக்கும் கோரிக்கையே இதுவாகும்.

விடுதலைப் புலிகளுடன் சுதந்திரமாகப் பேச்சு நடத்த இக்கோரிக்கை தடையாக இருக்கும். அத்துடன் விடுதலைப் புலிகள் பேச்சில் சுதந்திரமாகப் பங்குபற்றுவதையும் அது சிக்கலாக்கும். அவர்களுக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்தும் - என்றார். (ம-3)

## தமிழ் மக்களின் உணர்வுகளை எவராலும் சிதைக்க முடியவில்லை

### நேற்றைய நிகழ்வில் கவிஞர் இன்குலாப் உரை



யாழ்ப்பாணம்,ஒக்.20

ஈழத்தில் சிறிய - வலிமை குறைந்த இனமாக தமிழினம் இருந்தபோதும் வலிமைகூடிய சக்திகளுடன் அது போராடி வந்துள்ளது. தமிழ்மக்களின் கட்டடங்கள் தகர்க்கப்பட்டிருக்கலாம்; அவர்கள் சல்லடை போடப்பட்டிருக்கலாம். ஆனால், மக்களின் உறுதியையும் நம்பிக்கையையும் உணர்வையும் சிதைக்க எவராலும் முடியவில்லை.

- இவ்வாறு தமிழகத்தின் பிரபல கவிஞர் இன்குலாப் தெரிவித்தார்.

'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002' நிகழ்வின் முதலாம் நாளின் இறுதியில் 'தமிழ் தேசியமும் தமிழ்க் கவிதையும்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்த ஒரு தேசிய இனமும் பிற இனங்களுடன் சேர்ந்தும் வாழலாம். விரும்பினால் பிரிந்தும் செல்லலாம். இதுவே சுயநிர்ணய உரிமை. இந்தச் சுயநிர்ணய உரிமையானது ஒவ்வொரு மனிதனதும் அடிப்படை உரிமையாக இருக்கிறது.

இதற்காகத்தான் நீங்கள் போராடினீர்கள் - இப்பொழுதும் போராடிக்கொண்டிருக்கிறீர்கள்.

உலகில் பல நாடுகளில் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. தமது பண்பாடு, மொழி, கலாசாரம் என்பவற்றை நிலைநிறுத்தி தமது இனத்தின் விடுதலைக்காகப் போராட்டங்களை (12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை குழப்பவிரும்பும் சக்திகளே அக்கரைப்பற்றுச் சம்பவத்துக்கு காரணம்

### அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஒக்.20

சமாதானத்தைக் குழப்ப முயற்சிக்கும் சக்திகளே அக்கரைப்பற்றுச் சம்பவத்தின் சூத்திரதாரிகள். அவர்களின் சதி வலையில் மக்கள் சிக்கக்கூடாது.

இப்படிக் கூறினார் அமைச்சர் மிலிந்த மொறகொட.

அக்கரைப்பற்றுக்கு நேற்று விஜயம் மேற்கொண்டு அங்கு கூட்டிய மாநாட்டில் பேசுகையில் இப்படித் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, சமாதானச் (12ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்று சம்பவத்துக்கு காரணமானோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் பணிப்பு

கொழும்பு,ஒக்.20

அக்கரைப்பற்றில் முஸ்லிம் இளைஞர் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் நடந்த உயர்மட்ட மாநாடு ஒன்றில் இந்த விடயம் குறித்து ஆராய்ந்த பின்னரே இந்தப் பணிப்புரையை அவர் விடுத்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலை எதிர்கொள்ள பிரதான கட்சிகள் தயாராகின்றன

கொழும்பு,ஒக்.20

பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்நோக்க, பிரதான கட்சிகளான ஐ.தே. கட்சியும் 'பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் தயாராகின்றன என்று அக்கட்சிகளின் முக்கிய தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இத்தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆராய்ந்து வருவதாக அக்கட்சியின் தலைவர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

அதேபோல ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தலை எதிர்நோக்குவதற்கான வியூகங்கள் குறித்து ஆராய்ந்து வருவதாக அக்கட்சித் (12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் தனியார் காணிகளின் எல்லைகள் மீளமைக்கப்படும்!

### அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறுகிறார்

கொழும்பு,ஒக்.20

வடக்கில் உள்ள தனியாரின் காணிகளின் எல்லைகளை நேரவே நில அளவை நிபுணர்களின் உதவியுடன் மீள அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனரத்ன தெரிவித்தார்.

கடந்த 20வருட காலமாகத் தொ [illegible]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# போராட்ட நியாயத்தை சிங்கள மக்களுக்கு எடுத்துக்கூற ஊடகங்கள் முன்வரவேண்டும்

## பேராசிரியர் சிவத்தம்பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.20

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டமென சில ஊடகங்களே தவறாகச் சித்திரித்துக் காட்டின. தமிழர் போராட்டத்தின் நியாயத் தன்மையை சிங்கள மக்களிடம் தெளிவாக எடுத்துக் கூற ஊடகத்துறை முன்வரவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழறிஞர் பேராசிரியர் கா.சிவத்தம்பி.

நேற்று நடைபெற்ற 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' முதல் நாள் அமர்வில் கலந்துகொண்டு தொடக்கவுரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு பேராசிரியர் மேலும் கூறியதாவது:-

தமிழர் உரிமைகள் தொடர்பாக 1920 ஆம் ஆண்டு முதலே பேசப்பட்டது. தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குள்ளானபோது மானுட விடுதலைக்காக ஈழத் தமிழர்கள் கூடத் தலைப்பட்டனர். 1972ற்குப் பிற்பட்ட காலப் பகுதியிலேயே போராட்டத்தின் இன்றைய வடிவம் உருவானது. தமிழ் இளைஞர்களின் கூடல் வெறும் அரசியல் கோஷமாக அன்றி மானுடத்தின் குரலாக போராடத் தொடங்கியது. அது வெறும் யுத்தமாக (War) அல்லாமல் இடர் களையும் உரிமைக்கான தொடர் போராட்டமாக (Struggle) எழுந்தது. அப்போது எழுந்த அனைத்து இயக்கங்களும் 'விடுதலை' என்ற சொல்லை தமது பெயருடன் சேர்த்துக்கொண்டனர் என்பது இதற்குச் சான்று.

போராட்டம் எமது விடுதலைக்கானதே அன்றி எவர் ஒருவருக்கும் எதிரானது அல்ல என்பதை இது தெளிவுபடுத்தியது. இந்த உண்மை பெரும்பான்மை இன மக்களுக்கு தெளிவாகச் சொல்லப்படவில்லை.

போராட்ட வடிவங்களை மட்டும் கொண்டு உரிமைப் போராட்டத்தை மதிப்பீடு செய்ய முடியாது. வடிவங்கள் மாறிக்கொண்டு போனபோது, போராட்டம் தனது கட்டுக்கோப்பிலிருந்து இன்றுவரை தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை; விடுவித்துக் கொள்ளவும்கூடாது.

ஊடகங்கள் உலகப் பொது மாற்றத்திற்கும், ஜனரஞ்சக வெளிப்பாட்டிற்கும் அமைவாக வெளிவருவன. ஆழமான பிரச்சினைகளையும் சிறு கண்ணீர்த் துளியாக காட்டி மறைத்து விடும் வல்லமை அவற்றுக்கு உண்டு. 'ஊடகக் கலாசாரம்' ஆழமான பிரச்சினையை எப்போது மலினப்படுத்தும், எப்போது மிகையாகக் கூறும் என்பதை சொல்லமுடியாது. தமிழர் போராட்டத்தின் உண்மைத் தன்மையை, சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லாத வகையில் அம்மக்களுடன் தொடர்புடைய ஊடகங்கள் செயற்பட்டுக்கொண்டன.

சிங்கள மக்களுக்கு எமது விடுதலைப் போராட்டம் குறித்து தெளிவாகக் கூறவேண்டிய பணி தொடர்புடைய ஊடகங்களைச் சார்ந்தது.

தமிழ் மரபில், இதுவரை இல்லாத புதிய இலக்கியங்கள் கடந்த 25 வருட காலமாக ஈழத்தில் எழுந்து கொண்டிருக்கின்றன. அனுபவங்களின் ஆழத்தை, உறவுகளின் மென்மையை, சோகத்தை தெளிவாக வெளிப்படுத்துவன காத்திரமான இலக்கியங்களே! இலக்கியங்கள் மொழிகடந்தாலும், மதிப்பிறக்கம் அடைவதில்லை. தமிழர் உரிமைப் போரின் அதிர்வுகள் கலை, இலக்கியங்களில் தக்க சான்றுகளாக வெளிப்படுத்தப்படவேண்டும்.

- இவ்வாறு பேராசிரியர் கா.சிவத்தம்பி தெரிவித்தார். (ஐ-9)

# 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' இன்றைய நிகழ்வுகள்

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம், நிதர்சனம் மற்றும் தமிழ்த்தாய் வெளியீட்டகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' மாநாட்டின் இரண்டாம் நாளான இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இன்றைய மாநாட்டில் தொடக்க நிகழ்ச்சியை அடுத்து நாவல், அரங்கு, மொழிபெயர்ப்பு ஆகியன தொடர்பான மூன்று அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

காலை 9மணி முதல் 10.30மணி வரை தொடக்க நிகழ்ச்சிகள் இடம்பெறும். ஈகச்சுடரேற்றலைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதி சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராஜா ஆகியோரினால் விழாச் சுடர் ஏற்றப்படும்.

'புலிகளின் குரல்' நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் (ஜவான்) வரவேற்புரை வழங்குவார். தொடர்ந்து தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரனின் (பேபி சுப்பிரமணியம்) சிறப்புரை இடம்பெறும்.

முற்பகல் 10.30மணிமுதல் 12.30 மணிவரை நாவல் அமர்வு இ.ஞானசேகரன் தலைமையில் நடைபெறும்.

'எண்பதுகளுக்குப் பிற்பட்ட நாவல்களில் ஈழத் தமிழர்களது உரிமைப் போராட்டம்' என்ற தலைப்பில் செ.யோகராசாவும் -

'1956 - 1983 இடைப்பட்ட காலப் பகுதியில் மானுட விடுதலை நோக்கி ஈழத்து தமிழ் நாவல்கள்' என்ற தலைப்பில் செங்கைஆழியானும் - கட்டுரை வழங்குவர். பேராசிரியர் நந்தி இது தொடர்பான குறிப்புரையை வழங்குவார்.

பிற்பகல் 1.30 மணிமுதல் 3.00 மணிவரை 'அரங்கு' தொடர்பான அமர்வு குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

'உள்+அது காட்டும் அரங்கு' என்ற தலைப்பில் சிதம்பரநாதனும் -

'பங்குபற்றல் பண்பாட்டு உருவாக்கத்தில் சமுதாய அரங்கு' என்ற தலைப்பில் சி.ஜெய்சங்கரும் - கட்டுரை படிப்பர். க.ரதிதரனின் குறிப்புரையும் இடம்பெறும்.

மொழிபெயர்ப்பு தொடர்பான அமர்வு பிற்பகல் 3.30 மணிமுதல் இ.முருகையன் தலைமையில் நடைபெறும்.

'ஈழத்து இலக்கிய மொழிபெயர்ப்புகள் ஆங்கிலம் வழி தமிழுக்கும், தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கும்' என்ற தலைப்பில் கந்தையா ஸ்ரீ. கணேசன் கட்டுரை வழங்குவார். ஐ. சாந்தன் குறிப்புரை வழங்குவார்.

பிற்பகல் 5மணிக்கு 'தமிழ் இலக்கியப் போக்கும் ஒடுக்கப்பட்டோர் இலக்கியமும்' என்ற தலைப்பில் பா. செயப்பிரகாசம் சிறப்புரை ஆற்றுவார்.

தொடர்ந்து நிறைவுரையை புலிகளின் அரசியற்துறைப் பிரமுகர் சீ. புலித்தேவன் வழங்குவார்.

மாலை 6மணிமுதல் ரி.தேவானந்தால் எழுதப்பட்டு நெறியாள்கை செய்யப்பட்ட 'அக்கினிப் பெருமூச்சு' என்ற நாடகம் இடம்பெறும். (ம-9-4)

# தென்னந்தோட்ட உரிமையாளருக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.20

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள தென்னந்தோட்டங்களை பார்வையிட விரும்பும் தோட்ட உரிமையாளர்கள் உடனடியாக தம்முடன் தொடர்புகொள்ளுமாறு வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக சங்கம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பெருந்தோட்ட திணைக்களத்தால் கிராமசேவகர் ஊடாக அனுப்பப்பட்ட சேதவிவரம் கோரும் படிவங்களை பூர்த்தி செய்வதற்கு தோட்டங்களைப் பார்வையிட இராணுவ மேலிடத்துடன் தொடர்புகொள்ளப்பட்டுள்ளது. இதன்படி உரிமையாளர்களை தோட்டங்களுக்கு அழைத்துச்செல்வதற்கு திகதி நிர்ணயம் செய்வதற்கு 104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள தெங்கு செய்கையாளர் சங்கத்துடன் தொடர்புகொண்டு பெயரையும் தற்போதைய முகவரியையும் தோட்ட உரிமையாளர்கள் பதிவுசெய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்றுள்ளது. (ஒ)

# 10கிராமங்கள் புனரமைப்பு

வடமராட்சி,ஒக்.20

'நியாப்' திட்டத்தின் கீழ் வடமராட்சிப் பிரதேசத்தில் 7 குளங்களுடன் கூடிய 10 கிராமங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் துன்னாலை வடக்கு, வல்லிபுரம், புலோலி தெற்கு ஆகிய கிராமங்களும் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் இமையாணன், கரவெட்டி கிழக்கு, உடுப்பிட்டி தெற்கு, கொம்மாந்துறை, அத்தாய், கப்புது, மத்தொனி ஆகிய கிராமங்களும் புனரமைக்கப்படவுள்ளன. (ஒ-173)

### தென்மராட்சி பகுதியில்

# 'உ' அட்டை உடையோருக்கு கொடுப்பனவு இடைநிறுத்தம்

தென்மராட்சி,ஒக்.20

தென்மராட்சி பிரதேசத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட "உ" பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவான 2ஆயிரம் ரூபா வழங்குவதை இடைநிறுத்துமாறு யாழ்.செயலகம் தென்மராட்சி பிரதேச செயலரை பணித்துள்ளது.

கொடுப்பனவு வழங்குவதற்கான பட்டியல்கள் தயாரித்து பட்டியல் யாழ்.செயலகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் இக்கொடுப்பனவை இடைநிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மீளக்குடியமர்ந்தோரில் 'அ' பங்கீட்டு 'அட்டை வைத்திருப்போரின் பட்டியல் தயாரிப்பதில் பிரதேச செயலகத்தினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அரச ஊழியர், ஓய்வூதியர், வர்த்தகர், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் கடமையாற்றுவோர் வாகனங்கள் வைத்திருப்போர் உட்பட பலர் 'உ' பங்கீட்டு அட்டை வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.செயலகத்தின் திடீர் அறிவிப்பினால் பாதிக்கப்பட்ட "உ" பங்கீட்டு அட்டை வைத்திருப்போர் பிரதேச செயலகம் முன்பாக போராட்டம் நடத்தவுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-117)

# விளையாட்டு

### வலிகாம வலய உதைபந்தாட்டம்

## மானிப்பாய் இந்து, ஹென்றியரசர் இரு அணிகளும் சம்பியன்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.20

வலிகாமம் கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்களில் 16வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் 18வயதுப் பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டன.

நேற்றுமுன்தினம் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் நடைபெற்ற இறுதிப் போட்டிகளின் போதே இரு அணிகளும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

முதலில் நடைபெற்ற 16வயதுப் பிரிவினருக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் பங்குபற்றின.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் எந்த ஓர் அணியும் கோல்கள் எதையும் பெற்றுக் கொள்ளவில்லை.

மானிப்பாய் இந்துக் கல்லூரி இலகுவாக கோல் பெறுவதற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அவை அனைத்தையும் அந்த அணி தவறவிட்டது.

அதனைத் தொடர்ந்து மேலதிகமாக வழங்கப்பட்ட 'கோல்டன் கோல்' நேரத்திலும் இரு அணிகளும் கோல எதனையும் பெறாததையடுத்து வழங்கப்பட்ட தண்டனை உதை மூலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி 4:3 என்ற கோல் அடிப்படையில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தை வெற்றி கொண்டு சம்பியனாகியது.

அடுத்து இடம்பெற்ற 18வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் பங்குபற்றின.

ஆட்டம் தொடங்கி முதல் 15நிமிடங்கள் வரை இரு அணிகளும் விறுவிறுப்பாக விளையாடி கோல் பெறும் முயற்சியில் ஈடுபட்டனர். பின்னர் பிற்பகுதி ஆட்டம் சோர்வடைந்த நிலையிலேயே காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி தமக்கு கிடைத்த நேரில் உதை ஒன்றை கோல் கம்பத்தினுள் செலுத்திய போதும் இரண்டாம் நபரில் பந்து படாமல் சென்றமையால் மத்தியஸ்தரால் அந்தக் கோல் நிராகரிக்கப்பட்டது.

போட்டியின் இறுதிவரை இரு அணிகளும் கோல் எதனையும் பெறாததை அடுத்து மேலதிக நேரம் வழங்கப்பட்டபோதும் அதிலும் இரு அணிகளும் கோல் பெறத்தவறின.

இறுதியாக வழங்கப்பட்ட தண்டனை உதை மூலம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 5:4 என்ற கோல் அடிப்படையில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியை வெற்றி கொண்டது.(ஐ-5-86)

### இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.20

ஏசியன் விளையாட்டுக்கழகம் அமரர் "கமல்ஸ் ரென்ஸ்" ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் சிங்கள மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ள கால் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

★ காலை 9 மணி - அன்னை வேளாங்கன்னி வி.க. எதிர் யாழ். மரியன்னை வி.க.

★ முற்பகல் 11 மணி - கோப்பாய் ஐக்கிய வி.க. எதிர் பூமா வி.க.

★ நண்பகல் 12 மணி - கொய்யாத்தோட்டம் ச.ச. நிலைய வி.க. எதிர் ஏசியன் வி.க.(பச்சை).

★ பிற்பகல் 3 மணி - ஏசியன் வி.க. (வெள்ளை) எதிர் லைவின்ஸ்ரார் வி.க. (5)

# புலிகள் சுதந்திரமாக நடமாடும் சூழ்நிலையில் நியாயமான தேர்தல் நடப்பது சாத்தியமில்லை!

## டக்ளஸ் தேவானந்தா அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.20

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் புலிகளின் நடமாட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நிலையில் நியாயமான, சுதந்திரமான தேர்தல் நடத்தப்பட முடியுமா என்பது கேள்விக்குரியதாகும் என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் நடத்துவது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இப்படிக் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசமைப்புக்கான 19ஆவது திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பையடுத்து தோன்றியுள்ள அரசியல் சூழல் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் மீண்டும் ஒரு தடவை நடத்தப்படவேண்டுமா இல்லையா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. ஜனநாயக அரசியல் வழிமுறையில் செயற்படும் அரசியல் கட்சி என்ற வகையில் எந்த நேரத்தில் எந்தத் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதற்கு முகம் கொடுக்க எமது கட்சி தயாராகவே இருக்கின்றது. எனினும் தற்போது நோர்வே அரசின் அனுசரணையுடனும் பல்வேறு நாடுகளின் ஒத்துழைப்புடனும் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கான முயற்சிகள் பலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் சூழலில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுவது உடனடியாக அரசியல் உறுதிப்பாடற்ற நிலைமையை தோற்றுவிக்கும். இது வெண்ணெய் திரளும்போது தாழி உடைந்து போவதற்கு ஒப்பானதாகவே இருக்கும்.

மேலும் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார தேர்தல் முறையின் கீழ் எந்தவொரு கட்சியும் மூன்றிலிருபங்கு ஆசனங்களை நாடாளுமன்றில் பெற்றுக் கொள்வதென்பது மிக அரிதாகவே இருக்கும். இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் ஒத்துழைத்து சம்பந்தப்பட்ட சகல தரப்பையும், அரவணைத்து செயற்படவேண்டும் என்பதையே எமது கட்சி நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றது. தற்போது மீண்டுமொரு பொதுத் தேர்தல் நடத்தப்பட்டாலும் கூட நாடாளுமன்றில் மீண்டும் இந்த நிலையே நீடிக்கும். அத்துடன் ஜனாதிபதிக்கும் நாடாளு மன்றத்துக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகளையப்படலாம் என்பதைக்கூட இப்போது நடத்தவுள்ள தேர்தல் உத்தரவாதப்படுத்துமா என்பதும் கேள்விக்குரியதாகும்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் கடந்த பொதுத்தேர்தலின்போது முல்லைத்தீவு, கிளிநொச்சி அரசாங்க செயலகங்களில் தேர்தல் திணைக்களம் செயற்படுவதும் கூட இயலாததாக இருந்தது. மக்கள் சுதந்திரமாக தமது ஜனநாயக உரிமைகளை பயன்படுத்தும் சூழல் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருக்கவில்லை. இந்நிலைமைகளில் எதுவித மாற்றமும் இல்லை. அத்துடன் தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் புலிகளின் நடமாட்டம் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள நிலையில் நியாயமான சுதந்திரமான தேர்தல் நடத்தப்பட முடியுமா என்பதும் கேள்விக்குரியதாகும்.

கடந்த பொதுத்தேர்தலின் போது கபடத்தனமான கூட்டுச் சேர்ப்புகளாலும் கள்ளவாக்குப் பலத்தினாலும் நாடாளுமன்ற ஆசனங்களை பெற்றுக் கொண்டவர்களின் கையாலாகாத்தனம் தற்போது தமிழ் மக்கள் மத்தியில் அம்பலப்பட்டு வருகின்றது. அத்துடன் யுத்தத்தை நடத்திவந்தவர்களின் உண்மையான நோக்கம் என்ன என்பது குறித்தும் மக்களின் மத்தியில் தெளிவு பிறந்து வருகின்றது.

இந்த நிலையில் பொதுத் தேர்தல் நடத்தப்படுமாயின் எமது கட்சிக்கு கூடுதல் வாய்ப்புக்கள் ஏற்படுவது நிச்சயமானது. எனினும் கட்சி நலன்களை விட மக்களின் நலன்களே முக்கியமானது என்பதால் தற்போது அரசியல் கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போட்டியைத் தவிர்த்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்கு ஒத்தகருத்துடன் ஒருமித்து செயற்படவேண்டுமென வலியுறுத்துகின்றோம். அதாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலை விடவும் இன்றைய பிரதிநிதிகள் யுத்தத்திற்கு நிரந்தரமான முடிவு கட்டக்கூடிய வகையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை கொடுத்து செயற்படவேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' - 2002






'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002' நிகழ்வு நேற்று கோலாகலமாக ஆரம்பமானது. நிகழ்வின் முதலாவது அமர்வின்போது எடுக்கப்பட்ட படம் இது. அமர்வுக்குத் தலைமைதாங்கிய சீ.வீ.கே. சிவஞானம், வாழ்நாள் பேராசிரியர் கா.சிவத்தம்பி, புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் முறையே இடமிருந்து வலமாக அமர்ந்துள்ளனர்.

படங்கள் : தேவராஜன்












நேற்றைய நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்திய சி.இளம்பரிதி, தலைமையுரை நிகழ்த்திய சீ.வீ.கே. சிவஞானம், 'போர் இலக்கியங்கள்' என்ற விடயம் குறித்து சிறப்புரையாற்றிய நிலாந்தன், சிறுகதை அரங்கில் உரையாற்றிய தெளிவத்தை ஜோசப், நிறைவுரையாற்றிய தமிழினி ஆகியோரை இடது கரையில் மேலிருந்து கீழாக உள்ள படங்களில் காணலாம்.

மேலேயுள்ள படம் சிறுகதை அமர்வின்போது எடுக்கப்பட்டது. தெளிவத்தை ஜோசப், செம்பியன்செல்வன், இராஜ. தர்மராஜன், எஸ்.எல்.எம்.ஹனிபா ஆகியோரைக் காணலாம்.

தமிழகத்திலிருந்து வருகைதந்த 'விடுதலைச் சிறுத்தைகள்' அமைப்பின் தலைவர் திருமாவளவனையும் 'காற்றுக்கென்னவேலி' திரைப்பட இயக்குநர் புகழேந்தியையும் அருகில் உள்ள படத்தில் காணலாம்.

மண்டபம் நிறைந்திருந்த பேராளர்களை கீழுள்ள படத்தில் காணலாம்.







நேற்றைய நிகழ்வுகளை சிங்களச் சகோதரர்களுக்காக மொழிபெயர்த்த யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் விமல் சுவாமிநாதனை மேலுள்ள படத்திலும் -

நிகழ்வில் கலந்துகொண்ட அரசியல் வாதிகள் சிலரை கீழுள்ள படத்திலும் காணலாம்.



## காலணி விற்பனையாளர் தேவை

காலணிகள் விற்பதில் அனுபவம் மிக்க விற்பனையாளர் தேவை. 18வயதுக்கும் 20வயதுக்கும் இடைப்பட்டவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

**கபிலா காலணி அகம்**

(9661) 4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## FOR RENT OR LEASE IN MOOLAI

SPACIOUS UPSTAIR BUILDING
WITH A FLOOR SPACE OF 4070 Sq.ft.
AND
RESIDENTIAL QUARTERS
with a floor space of 3000 sq.ft.
(SUITABLE FOR N.G.OO)

*Please contact:* **President**
**Moolai Co-operative Hospital Society**

(9649)



## கம்பனிச் செயலாளர் சேவை

வரையறுக்கப்பட்ட கம்பனிகளைப் பதிவுசெய்யவும், (Formation of Limited Liability Companies), கம்பனிச் செயலாளர் வேலைகளில் தகைமை. (Registered Company Secretary)யும், நீண்ட அனுபவமும் உடைய கம்பனிச் செயலாளரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் சேவையின் விவரத்தை எழுத்துமூலம் தெரிவித்துப் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். நவம்பர்மாதம், முதல் வாரத்தில் சம்பந்தப்பட்டவர்களுடன் யாழ்ப்பாணத்தில் நேரடியாகத் தொடர்புகொள்ளப்படும்.

G.Sri Manoharan,
Company Secretary,
15, Sri Dhammadara Mawatha,
Ratmalana.
T.P.: 074-204703.Mobaile: 072-928481.

*461, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(9674)



## ரஷ்யாவில் உயர்கல்வி

### மருத்துவத்தில் MD

(ஆங்கில மூலமானது)

KURSK STATE மருத்துவப் பல்கலைக்கழகம் WHO இலங்கை மருத்துவக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

- ★ ஆகக்குறைந்த அனுமதிக்கான தகைமை G.C.E.A/L
- ★ ஏற்புடைய கற்கைநெறி, விடுதிக்கட்டணங்கள்

முதலாம் வருடம் - 3200 U.S.D.
இரண்டாம் வருடத்திலிருந்து 2800 U.S.D.
(கட்டணங்களை தவணைக்கட்டணங்களாகச் செலுத்தலாம்)

அனுமதிக்கும், மேலதிக தகவல்களுக்கும்

தொடர்பு: **Uthayajothy**
(Final Year Student in the University)
T.P.: Local 0777-984800, 01-334284
T.P.: Russia - 007071 2335823
E.Mail: uthayavan@yahoo.com

(C/24321)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
10 - 02 - 1937



உதிர்வு
20 - 09 - 2002

### திருமதி தங்கம்மா இராஜேந்திரம்

ஈரைந்து மாதங்கள் சுமந்தெமை ஈன்று
பார்போற்றும் படியாக பகலிரவாய் வளர்த்தெடுத்து
சீர்பெறு பிள்ளையராய் அவனியில் வாழவைத்த
'வேர்' உந்தன் ஆத்மசாந்திக்கெம் அஞ்சலிகள்!

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

எங்கள் பாசமிகு குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டோர், தொலைபேசி, தந்திமூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியோர் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்து, ஆறுதல்கூறிய அனைத்து அன்பு இதயங்களுக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றிகள்.

பிரிவால் வாடும்:
**அன்புப் பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*"நிலா தாரகை",*
*அல்வாய் வடக்கு.* (9677)

## கண்டியில் நந்திக்கொடி விற்பனை

கொழும்பு,ஒக்.20

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கைக் கலைக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கண்டி மகாமாயா கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றுவரும் கலாபிரசாதினி சாகித்திய கலை நிகழ்வில் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நூல்கள், நந்திக் கொடிகள் என்பன விற்கப்பட்டு வருகின்றன. (ஒ-12)

## உதைபந்தாட்ட போட்டிகளுக்கு அனுமதி மறுப்பு

வலி.வடக்கு,ஒக்.20

இடம்பெயர்ந்து மீண்டும் சொந்த இடத்தில் இயங்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிக்கும் வேறு 4 பாடசாலை அணிகளுக்கும் இடையேயான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடத்த படைத்தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினர் யூனியன் கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்த அனுமதிக்காததையிட்டு மாணவர்கள் மிகவும் கொதிப்படைந்து காணப்படுகின்றார்கள்.

இப்பாடசாலை சொந்த இடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்ட படை அதிகாரிகள் மாணவர்களுக்கும் பாடசாலைக்கும் உதவிகள் செய்வதாகக் கருத்துக்கள் தெரிவித்ததை பாடசாலைச் சமூகம் சுட்டிக்காட்டியுள்ளது.

(ஒ-86)


## வேலை வாய்ப்பு

*விளம்பரத்துறையில் பயிற்சியளித்து கொழும்பிலும், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.*

*தொடர்பு:*
**ஜோ.எகட்டன்,**
10/3, கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை.
கண்டுக்குளி. யாழ்ப்பாணம்.

(9666)


## வாழ்த்துகின்றோம்



சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் கல்வி பயின்று
தமிழ்/கணனி/ஆங்கில பிரிவுப் பரீட்சையில்
சித்தியடைந்து 27.09.2002 நடைபெற்ற
பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற
**செல்வன்**
**மோசஸ் பத்மலால் மதுரநாயகம்**
**(வசந்தன்)**

அவர்களை என்றும் ஆண்டவரின் அருளும் ஆசீர்வாதமும் பெற்று வாழ்க்கையில் எல்லாத்துறைகளிலும் வெற்றியடைய, பிறந்ததினமாகிய இன்று 20.10.2002 (ஞாயிற்றுக்கிழமை) நற்சுகத்துடன் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

பி.ஸ்.ஜி. ரெவிகொம்,
ஆனைக்கோட்டை
T.No. 222-2753

(9614)

**பாலகுமாரநாதன்**
**குடும்பத்தினர்.**

உ

## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருடம் ஐப்பசித் திங்கள் 4ஆம் நாள் (21.10.2002) திங்கட்கிழமை முற்பகல் 11.45 மணிமுதல் 1.15 மணிவரையுள்ள சுப முகூர்த்த நல்வேளையில்

### ஐங்கரன் வெதுப்பகம்

என்னும் வெதுப்பக ஸ்தாபனத்தை கோப்பாய், பருத்தித்துறை வீதியில் ஆரம்பித்து நடத்தப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளமையால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அனைவரும் வருகை தந்து திறப்புவிழாவில் பங்குபற்றி விழாவைச் சிறப்பித்து எம்மை மகிழ்வித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.
077 - 110105. (9569)

*தங்கள் வரவை விரும்பும்:*
திரு.இ.பொன்குமார்
சிகானு வீதி, முழங்காவில்.

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஐப்பசி மாதம் 4ஆம் நாள் (21.10.2002) திங்கட்கிழமை காலை 10.15 மணிமுதல் 12 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில்,

எமது சிரேஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**திருக்குமரன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**ஸ்ரீமதி**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு சட்டநாதர் வீதி, நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் திருமண வைபவம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அங்கு நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி சுப்பிரமணியம்
*இத்தாவில், பளை,*
*த.மு.கோகுல வீதி, கோண்டாவில்.*

(இருவீட்டார் அழைப்பு)

திருமதி வீ.முத்துக்குமாரசாமி
*சோமசுந்தரம் வீதி,*
(9679) *ஆனைக்கோட்டை.*

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

## கல்விக் கண்காட்சி



17, 18ஆம் திகதிகளில் நடைபெற்ற கல்விக்கண்காட்சி அநேகரின் வேண்டுகோளுக்கமைய நாளை (21.10.2002) திங்கட்கிழமையும் நடைபெறும் என்பதையும் இந்த அற்புதமான படைப்புக்கள் புதிய கல்வி மறுசீரமைப்புக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளமையால் அனைவரும் கண்டு பயன்பெறுமாறு அழைக்கின்றோம்.

விசேடமாக சித்திரக்கலைப் பாடத்தின் அற்புத படைப்புக்கள் அனைவரது உள்ளங்களையும் கவர்ந்தமையால் காணத் தவறாதீர்கள்.

(C-24339)

**கோப்பாய்**
**ஆசிரியர் கலாசாலை.**

# உதயன்

## தேர்தலை நாடும் ரணில்

பலரும் எதிர்பார்த்தபடி மீண்டும் ஒரு பொதுத் தேர்தலுக்குத் தயாராகும் சூழ்நிலைக்கு நாடு தள்ளப்பட்டிருக்கின்றது.

நாட்டை இரண்டு தசாப்தகாலமாக சீரழித்துக் கொண்டிருக்கும் இனப்போருக்கு சமரச வழியில் - சமாதான முறையில் - அமைதித் தீர்வு காண முற்பட்டிருக்கும் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமது நோக்கத்தை எட்டுவதற்காக வேறு வழியின்றி தனது பத்து மாதகால ஆட்சிக்கு முடிவு கட்டி, பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்.

அமைதி முயற்சியில் தீவிரமாகச் சிந்திக்கும் அரசு ஒருபுறம். இனப்போருக்கு சமாதானத் தீர்வு காண்பதில் - ஈழத் தமிழர்களுக்கு கௌரவத்துடன் கூடிய சுயாட்சி முறை வழங்குவதைக் கிஞ்சித்தும் விரும்பாத - நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மறுபுறம்.

இவை இரண்டுக்கும் நடுவில் சமாதானத்துக்கான வேட்கையோடு அல்லாடுகின்றது சிங்கள தேசம்.

பிரதமர் ரணிலின் அரசை எப்போது வேண்டுமானாலும் கலைக்கும் அதிகாரம் அவரது ஆட்சிக்காலத்தின் ஒரு வருட ஆயுள் பூர்த்தியாகும்போது - எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி - நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான சந்திரிகாவுக்கு வந்துவிடும்.

ஏன், இப்போது வேண்டுமானாலும், ரணிலின் அரசை ஜனாதிபதியால் முடக்கிப் போடமுடியும்.

அடுத்த 45 நாள்களுக்கு நாடாளுமன்றத்தை இடைநிறுத்தி வைத்துவிட்டு, டிசெம்பர் 5ஆம் திகதியுடன் நாடாளுமன்றைக் கலைத்து, ரணிலின் அரசை வீட்டுக்கு அனுப்ப ஜனாதிபதி குமாரதுங்கவால் முடியும்.

தற்போதைய சமாதான முயற்சிகளை முற்றும் முழுதாக எதிர்ப்பவர் ஜனாதிபதி குமாரதுங்க. தனது அரசின் ஆட்சிக் காலத்தில் 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற விநோதக் கொள்கையோடு தமிழர் தேசியம் மீது போர் வெறியைக் கொட்டியவர் அவர்.

அவரை எதிர்த்துக் கொண்டு சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது - அதுவும் நாடாளுமன்றைக் கலைத்துத் தனது அரசை வீட்டுக்கு அனுப்பும் அதிகாரத்தைக் கொண்டுள்ள ஜனாதிபதியின் விருப்பத்துக்கு மாறாக - சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது இயலாத காரியம். அப்படி முன்னெடுத்தால் 'நித்திய கண்ட' நிலையிலேயே தமது அரசின் ஆட்சிக் காலத்தை நகர்த்த வேண்டியிருக்கும். அத்தகைய ஆட்சியில் சமாதான நடவடிக்கைகளை உறுதியுடன் முன்னெடுத்துத் துணிச்சலுடன் செயற்படுவது முடியாத விடயம் - இப்படி பிரதமர் ரணில் கருதுகின்றார்.

எனவே, சமாதான முயற்சிகளை நல்ல முறையில் முன்னெடுப்பதற்கு வழியாகத் தனது அரசின் ஸ்திரத்தன்மையை அவர் உறுதிப்படுத்த விரும்பினார்.

இதற்காக நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை வெட்டவும் பிரதமர் முயன்றார்.

இதற்கு வழி செய்யும் 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்தை அவரது அரசு நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்தது.

ஆனால், அதைச் சட்டமாக்குவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவும், சர்வஜன வாக்கெடுப்புமூலம் மக்கள் அனுமதியும் அவசியம் என்று உயர் நீதிமன்றம் முடிவு செய்து விட்டதாக அறியவருகின்றது.

19ஆவது திருத்தத்துக்கு சர்வஜன வாக்கெடுப்புமூலம் மக்கள் அனுமதியைப் பெற்றாலும் அதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரு பங்கினரின் ஆதரவைப் பெறுவது ரணில் அரசுக்கு மிகக் கஷ்டமானது. இன்றைய நிலையில் நாடாளுமன்றில் அத்தகைய ஆதரவு அவரது அரசுக்குக் கிடைப்பது துர்லபமே.

இந்தக் காரணங்களினால் வேறு வழியின்றி பொதுத் தேர்தலை நாடுகின்றார் ரணில். தேர்தலில் தமது அரசு வெல்வது உறுதி என அவர் கருதுகின்றார். அந்த வெற்றியின்மூலம் அமையும் தனது புதிய அரசை அடுத்த ஒரு வருடகாலத்துக்கு ஜனாதிபதியால் அசைக்கமுடியாது என்பதும் அவருக்குத் தெரிந்ததே.

அவ்வாறு தனது அரசை ஒரு ஸ்திர நிலையில் வைத்தால்தான் இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வு முயற்சியில் உறுதிப்பாடுடன்கூடிய முடிவுகளை எடுக்கலாம் என்றும் அவர் நினைக்கின்றார்.

இந்த நோக்கத்துக்காக அவர் பொதுத்தேர்தலை நாடுவதை யாரும் தவறு என்று கூறமுடியாது.

ஆனால், புலிகள்தான் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை வாய்கிழியக் கூறி, அதன்மூலம் வாக்குத் திரட்டி, எம்.பியான பின்னர், இப்போதே புலிகளுக்கே 'அல்வா' காட்டும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் சிலருக்குப் பொதுத் தேர்தல் என்ற பேச்சு வயிற்றில் புளியைக் கரைக்கும் என்பது நிச்சயம்தான்.

# நல்லொழுக்கத்துடன் கூடிய கல்வியே இளைய சந்ததியினரை வழிப்படுத்தும்!

## யாழ்.மேலதிக அரச அதிபர் கூறுகிறார்

செம்பியன்பற்று,ஒக்.20

நல்லொழுக்கத்துடன் கூடிய கல்வியே இளைய சந்ததியினரை நல்வழிப்படுத்தும்.

எனவே இளைய சந்ததியினரின் வாழ்வை மேம்படுத்துவதில் நூலகங்களும் அதிக பங்களிப்பு வழங்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம்.

தேசிய நூலக ஆவணாக்க சேவைகள் சபையும், மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களமும் இணைந்து நடத்திய பொது நூலகர்களுக்கான பயிற்சிப் பட்டறை யாழ். மாநகர சபையின் பொது நூலகக் கேட்போர்கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்தப் பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலதிக அரச அதிபர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்கால சந்ததியினரின் அறிவு மேம்படுத்தப்பட்டு அவர்கள் வாழ்க்கையில் வெற்றிபெற எமது கல்விப் பணி சிறப்பாக அமையவேண்டும். இதற்கு நூலகங்களின் செயற்பாடுகள் மிக முக்கியமானதாகின்றன. நாம் இன்று புதிய யுகத்தில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இந்த நேரத்தில் நாம் பல்வேறுதுறைகளிலும் முன்னணியில் திகழவேண்டும். இல்லையேல் விரைவாக மாறிவரும் உலகை நாம் எதிர்கொள்ளமுடியாது.

பல்வேறு வகையான அறிவுகள், விசாலமான புத்திக்கூர்மை என்பன உள்ள சிறந்த நூலகர்கள் நாட்டின் அபிவிருத்திக்கும் வழிவகுப்பவர்களாவர். சிறந்த நூலகர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவேண்டியவர்கள். நூலகங்கள் ஆவணக் காப்பகங்களாக செயற்படவேண்டும்.

பத்திரிகைகள் வருட முடிவில் விற்பனை செய்யப்படாமல், வேண்டிய கட்டுரைகள், செய்தித்துணுக்குகள் தொகுக்கப்பட்டு நூலகங்களில் பாதுகாப்பாக வைக்கப்படவேண்டும்.

அத்துடன் நூலகங்கள் கணனிமயப்படுத்தப்படவேண்டும். நூலகர்கள் கணனி பற்றிய போதிய அறிவுகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். நூலகர்கள் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருக்கவேண்டும் - என்றார்.

இப்பயிற்சி வகுப்பில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 50 இற்கு மேற்பட்ட நூலகர்கள் கலந்துகொண்டனர்.

யாழ்.மாநகர சபை முதல்வர் செல்லன் கந்தையன், ஆணையாளர் ஈ.இராமலிங்கம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, தேசிய நூலக ஆவணச் சபை நூலக உதவியாளர் செல்வி கே.கமலாம்பிகை, முகாமைத்துவப் பயிற்சி இணைப்பாளர் செல்வி சந்திரா மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். (ஏ-ரி)

### யாழ்.மாவட்டத்தில் உள்ள

## படையினர், பொலீஸாருக்கு மனித உரிமை குறித்து பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றிவரும் படையினர் மற்றும் பொலீஸாருக்கான மனித உரிமைகள் பற்றிய பயிற்சிப்பட்டறை ஒன்று இன்று தொடக்கம் இருதினங்கள் நடைபெறவுள்ளதென மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஆர்.பி.சந்திர சேகரா தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பாதுகாப்புப் படையினரால் பொதுமக்கள் தாக்கப்படுவது உள்ளிட்ட மனித உரிமை மீறல் செயற்பாடுகள் இடம்பெற்றுவருவதால், அவற்றைத் தவிர்க்கும் நோக்குடன் இப்பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளதாகவும் -

பொலீஸாருக்கான பயிற்சிப்பட்டறை யாழ்.பொலீஸ் நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கும், இராணுவத்தினருக்கு நாளை திங்கட்கிழமை யாழ். இராணுவ அலுவலகத்தில் முற்பகல் 10.30 மணிக்கும் இடம்பெறவுள்ளதாகவும் -

மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சிப்பட்டறையில் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான சட்டத்தரணி எம்.ரொமிடியாஸ், மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகர மற்றும் மனிதஉரிமை ஆணைக்குழுவின் செயற்திட்ட அலுவலர் செல்வி வ.வேழினி ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (ஒ-5)

### எழுதக் கற்றுக்கொடுத்த

## என்னை அலங்கோலமாக ரூபவாஹினியில் காட்டுகிறார்!

### அதிகாரி மீது ஜனாதிபதி பாய்ச்சல்

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் தம்மிக்க கங்கநாத் திஸாநாயகவிற்கு நான்தான் எழுதக் கற்றுக்கொடுத்தேன். ஆனால், அவர் இன்று நான் மேடைகளில் உரையாற்றும்போது என்னை அலங்கோலமான முறையில் படமெடுத்து ரூபவாஹினியில் காண்பித்து வருகிறார்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் இலங்கை நிதகஸ் சேவக சங்கத்தின வைபவத்தில் உரையாற்றும்போது கூறியதாக 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'நான் பொதுவாக உரையாற்றும்போது, நன்கு சிந்தித்து உரையினை முறைப்படி பகுத்துத்தான் உரையாற்றுகிறேன். ஒருபோதும் அசிங்கமான, தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்துவதில்லை. ஆனாலும், சில சந்தர்ப்பங்களில் தவறுதலாக வாய்தவறி சில சொற்கள் பயன்படுத்தப்பட்டால் அந்தப் பேச்சுக்கள் இரவு பகலாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படுகின்றன. எனினும், எனது உரைகளை பூரணமாக ரூபவாஹினியில் ஒளிபரப்புமாறு நான் அவரைக் கேட்டிருந்தும் அவர் அதனை மறுத்துள்ளார். அதனால் எனது உரைகளைப் பூரணமாக ரூபவாஹினியில் ஒளிபரப்புமாறு ஊடகத்துறை அமைச்சரைக் கேட்டுக்கொண்டதன் பேரில் அவை பூரணமாக ஒளிபரப்பட்டுள்ளன. பின்னர் அந்த உரையை செவிமடுத்த பல கல்விமான்கள் அந்த உரைகளைப் பற்றி எதுவித குறைகளும் கூறவில்லை' என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்காகள் மற்றும் ரத்வத்தைகள் ஒருபோதும் ஓடமாட்டார்கள்; எந்தவித எதிர்ப்புக்களையும் எதிர்கொள்வார்கள் என்றும் ஜனாதிபதி மேலும கூறியுள்ளார் என்று அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நாளை**

ஐப்பசி 04
திங்கட்கிழமை
(21.10.2002)
திதி : பூரணை
முற்பகல் 1.21 வரை.
நட்சத்திரம்: ரேவதி
காலை 6.21 வரை.
சுபநேரம் : 12.02 - 1.32
ராகுகாலம் : 7.32 - 9.02
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

பொறுமை எனும் ஆயுதத்தை வைத்துள்ளவன் சாமதானாலும் உறுதியான வெற்றியைப் பெறுகிறான்.

### மீளக்குடியமர்ந்தோர் குறித்து

## கணக்கெடுத்தவர்களுக்கு கொடுப்பனவு கிடைக்கவில்லை!

### அப்பணியில் ஈடுபட்டோர் விசனம்

கொடிகாமம்,ஒக்.20

அகதிகள் புனர்வாழ்வு மீள்குடியமர்வு அமைச்சும், அகதிகளுக்கான ஐ.நா.தூரதகமும் இணைந்து மேற்கொண்ட மீள்குடியமர்ந்தவர்கள் குறித்த கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் இதுவரையிலும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட இக்கணக்கெடுப்புப் பணியில், யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலகரீதியாக அரச ஊழியரும், தனியாரும் ஈடுபடுத்தப்பட்டனர்.

இக்கணக்கெடுப்பை மேற்கொண்டவர்களுக்கு படிவம் ஒன்றுக்கு 20 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படும் என்று அப்போது அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு பல மாதங்களாகியும் இதுவரையும் அதற்கான கொடுப்பனவுகள் அப்பணியில் ஈடுபட்டோருக்கு வழங்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகத் தமது விசனத்தை வெளிப்படுத்தும் மகஜர்களில் கையெழுத்திட்டு அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு கணக்கெடுப்பை மேற்கொண்டவர்கள் சமர்ப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-ரி)

### கழுத்துறைச் சிறையிலுள்ள

## தமிழ்க் கைதி சச்சியின் உறவினருக்கு வேண்டுகோள்!

கொடிகாமம்,ஒக்.20

களுத்துறைச் சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்படவுள்ள எஸ்.சச்சி என்பவரைத் தெரிந்த எவராவது உடனடியாகக் களுத்துறைச் சிறைச்சாலையுடன் தொடர்புகொண்டு அவரை வெளியே அழைத்துச் செல்ல உதவுமாறு கோரப்பட்டுள்ளது.

வானொலி நிழ்ச்சி ஒன்றில் இணைந்துகொண்ட அறுகு வெளியைச் சேர்ந்த சண்முகம் என்பவரே இது தொடர்பாகத் தகவல் வெளியிட்டார்.

தனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள கடிதம் ஒன்றில் -

கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் படையினரால் கைது செய்யப்பட்ட எஸ்.சச்சி ஆகிய நான் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளேன். எனக்கு பெற்றோர், சகோதரர் எவரும் இல்லை. கடந்த காலங்களில் யாருடனும் தொடர்புகொள்ள முடியவில்லை. தற்போது என்னை விடுதலை செய்வதற்கு உறவினர்கள் ஒருவர் கையொப்பம் இடவேண்டும். எனவே நான் குறிப்பிடும் கீழ்க்கண்ட நபர்கள் எங்கிருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து அவர்கள்மூலம்என்னை மீட்டெடுக்க உதவவும்.

புங்குடுதீவை வசிப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் (தகப்பன்), தவமணி (தாய்), மகன் பத்மநாதன், கலா, நிலோஜினி மகள்கள் ஆகியோர் நான் கைதுசெய்யப்பட்ட காலத்தில் கச்சாய் அம்மன் கோயிலில் இருந்து அரை கிலோ மீற்றர் தூரத்திற்குள் வசித்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்ததாகத் தெரிவித்தார்.

குறிப்பிட்ட எஸ்.சச்சியைத் தெரிந்தவர்கள் எவராவது சச்சி சிறையிலிருந்து வெளியேற உதவுமாறு சண்முகம் வேண்டுகோள் விடுத்தார். (ஒ-ரி)

### யாழ்.வர்த்தகர் மீதான தாக்குதல்:

## பொலீஸ் மா அதிபரிடம் முறையிட மனித உரிமை ஆணைக்குழு முடிவு

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.நவீன சந்தைப் பகுதியில் வைத்து வர்த்தகர் ஒருவர் பொலீஸாரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவது தொடர்பான விசாரணைக்கு சம்பந்தப்பட்ட பொலீஸார் சமுகமளிக்காமையால் இது தொடர்பாக பொலீஸ் மா அதிபருக்கு முறையிட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான இரண்டாம் கட்ட விசாரணைகள் நேற்றுமுன்தினம் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது தாக்குதலுக்கு உள்ளான வர்த்தகர் விசாரணைக்கு சமுகமளித்திருந்தபோதும், தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பொலீஸார் சமுகமளிக்காததையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-5)

# இரண்டாவது பிறந்தநாள் நல்வாழ்த்து




HAPPY BIRTHDAY

2nd

## செல்வன் சாருஜன்

**சண்முகலிங்கம் - மகேஸ்வரி (சறோ)** தம்பதியினரின் தவப்புதல்வன்

### செல்வன் சாருஜன்

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (20.10.2002) ஞாயிற்றுக்கிழமை வல்லிபுரக்குறிச்சியில் உள்ள தனது 'பூரணபவனம்' இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

சாருஜனை வல்லிபுரக்குறிச்சியில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா மற்றும் கனடாவில் வசிக்கும் பெரியத்தை, சின்னத்தை, குட்டியத்தை, மாமாமார், லண்டனில் வசிக்கும் சித்தப்பா, சித்தி, அக்கா, அமெரிக்காவில் வசிக்கும் மச்சான், பிரான்ஸில் வசிக்கும் சித்தப்பா, சித்தி, அக்காமார், அண்ணா, நோர் வேயில் வசிக்கும் அபப்பா, அம்மம்மா, அக்காமார், அண்ணாமார் மற்றும் கோப்பாயில் வசிக்கும் அப்பம்மா, சித்தி, அக்காமார், சுன்னாகத்தில் வசிக்கும் மாமா, அத்தை, மச்சான்மார், மச்சாள்மார் ஆகியோர் பல்லாண்டுகாலம் பல் கலையும் கற்று வளமுடன் என்றும் வாழ இனிதே வாழ்த்துகிறார்கள்.

'பூரணபவனம்',
புலோலி தெற்கு, புலோலி. (C/24336)

தகவல்:
அப்பா.

---

# பெயர் மாற்றம்

எனது மகன் **சிவரஞ்சன் டினேஷ்** என்பவருடைய முழுப் பெயர் **சிவரஞ்சன் தினேஷ்** என மாற்றிக் கொள்ளப்பட்டுள்ளது என்பதனை இலங்கை அரசாங்கத்துக்கும், பொதுமக்களுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

சி.சத்தியமலர்
தாய்
*(திருமதி சிவரஞ்சன் சத்தியமலர்).*

*உடுவில் மேற்கு,*
*சுன்னாகம்,* (C/24333)

---

# தேவை

## முன்பள்ளி ஆசிரியை

2003 ஜனவரி முதல் மீண்டும் இயங்கவுள்ள எமது முன்பள்ளிக்கு பயிற்றப்பட்ட ஆசிரியை தேவை.

சுயவிவரங்கள் அடங்கிய, சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப் பங்கள் வரவேற்கப்படுகின்றன.

*விண்ணப்பங்கள் முடிவு திகதி:* 02.11.2002

நிர்வாகம்,
அரியாலை சனசமூகநிலையம்,
புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

(9594)

---

## நாற்றுமேடைகள் அமைப்பதில் தீவிரம்

வலி.தெற்கு, வலி.தென்மேற்குப் பிரிவுகளில் உள்ள விவசாயிகள் நாற்றுமேடைகள் அமைப்பதில் தற்போது தீவிரமாகச் செயற்பட்டுவருகின்றனர்.

உடுவில், மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய், கட்டுடை, மானிப்பாய், சங்குவேலி போன்ற இடங்களில் உள்ள விவசாய நிலையங்களில் தற்போது புழுதி நெல் விதைக்கப்பட்டுள்ளது.

தற்போது தொடரும் வரட்சியை தொடர்ந்து அடைமழை பெய்து வயல்களில் வெள்ளம் ஏற்பட்டால் நெற்பயிர்கள் அழிந்து போகலாம் என எதிர்பார்த்து அக்காலத்தில் மறு நடுகை செய்வதற்காக முன்னேற்பாடாக விவசாயிகள் தற்போது நாற்று மேடைகளை அமைத்து வருகின்றனர்.

பெரும்பாலான விவசாயிகள் குறுகிய கால நெற்பயிர்களைத் தவிர்த்து ஆறு மாத கால நெற்பயிர்களை விதைப்பதிலேயே தற்போது அதிக ஆர்வங்காட்டி வருகின்றனர்.(ஓ-152)

---

மனைக்கு வெளியே ஒருமனை!

## ஜெசித்தாரா

**விலை குறைப்பு**

- **Four in One** சிக்கன் புரியாணி அச்சாறுடன்

குறைக்கப்பட்ட விலையில்
**110 ரூபா மட்டுமே.**

**வழமையான உணவுப் பொதிகள் நண்பகல் 12மணி முதல் 3மணிவரை.**

- முன்பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

*உங்கள் உணவகம்*

**ஜெசித்தாரா**

***19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.***

(9661)

---

## அறிவித்தல்

வெளிநாடு சென்றிருந்த வண்ணை ஆங்கில வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் வே.லோகநாதன் தன்னுடைய சேவையை மீண்டும் தொடங்கிவிட்டார்.

**டாக்டர் வே.லோகநாதன்**
**178, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (9670)

---

### விண்ணப்பப்படிவம்

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தில் தமிழ்மொழிமூல குடும்ப நல மாதர் உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புப் படிவமும், விவரமும் 17|= வடகிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு படிவமும் விவரமும் 15|= தபாலிற்பெற KOTAHENA தபாற்கந்தோருக்கு மணியோடர் அனுப்பவும்.

**LOTUS ADVERTISING.**
5-1/21, KOTAHENA
MARKET COMPLEX,
COLOMBO - 13 TEL. 440708

(C-24329)

---

# ஹோட்டல் சீவம்ஸ்

**தலைநகரில் கடந்த 16 வருட காலமாக மிகச் சிறந்த சேவையாற்றும் ஒரே ஸ்தாபனம்:**

## ஹோட்டல் சீவம்ஸ்

1. தனி அறை (Single Room)
2. இருவர் அறை (Double Room)
3. கொமட் (Commod) வசதியுடன் கூடிய அறைகள்
4. குளிரூட்டப்பட்ட அறை (Air Condition Room)

மிகவும் சகாயமான கட்டணங்களில் வாடகைக்குக் கிடைக்கும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்:

## HOTEL SEIVAMS

*(GUEST HOUSE)*
*93, Vivekananda Hill, Colombo -13.*
*T.P.: 326522*

(9572)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1934 - 05 - 27

மறைவு 2001 - 10 - 31

## திருமதி
## இராசரத்தினம் பரமேஸ்வரி

***(வண்ணை ஸ்ரீ வில்வலிங்கப் பிள்ளையார் கோயில் முன்னாள் முகாமையாளரும், வண்ணைத் தில்லைக்காளியம்பாள் தேவஸ்தான முன்னாள் உரிமையாளருமான அமரர் நல்லதம்பி இராசரத்தினத்தின் அன்பு மனைவி)***

திதி: பூரண சதுர்த்தசி 2002-10-20

*ஓராண்டு ஓடி வந்தது – அம்மா*
*நீயோ கனவுலகில் கலந்தாயே – அம்மா*
*உன் நினைவலைகள் எம்மை*
*தினமும் வாட்டுதே – அம்மா*
*காலங்கள் ஓடினாலும் உந்தன்*
*நினைவுகள் மாறாதே – அம்மா*
*அம்மா என்ற தலைவி*
*இல்லாமல் கலங்குகின்றோம் – அம்மா*
*அம்மா என்று இனி*
*யாரை அழைப்போம் அம்மா?*

*இல 50, நாவலடி லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (9273)

*பிரிவால் துயருறும்:*
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 - 01 - 1930

மறைவு 31 - 10 - 2001

## அமரர் தம்பு ஆறுமுகம்

*(ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்(C.O))*

திதி: பௌர்ணமி 20.10.2002

நீண்டதோர் துயரம் நிரெமக்களித்து விட்டு
இவ்வுலகந்தனை விட்டகன்றதேனோ?
ஆண்டுகள் பலவும் ஆகிடினும் அவனிதனில்
ஐயாவுன் நினைவு எம்மைவிட்டு அகன்றிடுமோ?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*நாவலடி,*
*ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.* (9483)

- குடும்பத்தினர்.

---

# *கோலாகலமான புதுப்புடைவைக் கடைத்திறப்புவிழா*



* யாழ்.நகர மக்களின் மனம் மகிழ்ந்திட
* நவநாகரிக உலகில் நவயுகம் திகழ்ந்திட
* மங்கையரென்ன ஆடவரைக்கூட
கவர்ந்தழைக்கும் காட்சியறையுடன்
தங்கத் தாமரை தரணிமீது பொங்கிப் புடைசூழ
எங்கள் திருநாட்டில் தித்திப்பாய் எழுகின்றாள்!

அவளே......... உங்கள்



## சுவேதா

சுவேதா சில்க்ஸ்........................ இது உங்கள் ஸ்தாபனம்
சுவேதா சில்க்ஸ்........................ இது உங்கள் இல்லம்
சுவேதா சில்க்ஸ்........................ இது உங்களின் உள்ளம்
சுவேதா சில்க்ஸ்........................ இதுவே உங்களின் தெரிவு

21.10.2002 திங்கட்கிழமை
பகல் 10.00 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள சுபவேளையில்

## சுவேதா சில்க்ஸ்

**ஸ்தாபனத்தின் திறப்புவிழா வைபவம் இல.05, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நிகழ்வுறவுள்ளது. அனைத்து வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களையும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். இத்தினத்திலிருந்து 21.10.2002 முதல் 04.11.2002 தீபாவளிப் பண்டிகைத் தினம் நண்பகல் 12.00மணிவரை**

| | |
|---|---|
| *முதலாவது பரிசு* | புத்தம் புதிய லுமாலா சைக்கிள் |
| *இரண்டாவது பரிசு* | ரூபா 2000/= ரொக்கம் (வவுச்சர்) |
| *மூன்றாவது பரிசு* | ரூபா 1000/= ரொக்கம் (வவுச்சர்) |

*இல.05, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.* (9555) - சுவேதா சில்க்ஸ் ஸ்தாபனத்தார்.

# நாடாளுமன்றம் கோரினாலும் ஜனாதிபதி கலைக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல!

## அமைச்சர் பீரிஸின் கூற்றுக்கு செயலகப் பேச்சாளர் பதில்

கொழும்பு,ஒக்.20

பொதுத் தேர்தலை எதிர்நோக்க அரசாங்கம் தயாரகியிருப்பதையடுத்து நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்பாரா, இல்லையா? என்ற ஆராய்வில் அரசியல் அவதானிகளும் சட்ட வல்லுநர்களும் ஈடுபட்டிருக்கின்றனர். அரசியல வாதிகளும் இது தொடர்பான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர்.

பெரும்பான்மை வாக்குகள்மூலம் நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு கோரும் அரசமைப்புச் சட்டரீதியான உரிமை பிரதமருக்கும் ஐதேமுன்னணி அரசுக்கும் இருப்பதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார். அரசின் இக்கோரிக்கையை ஜனாதிபதி நிராகரிப்பது ஜனநாயக விரோதச்செயல் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி செயலகப் பேச்சாளரான ஹரீம் பீரிஸ் இவ்விடயம் குறித்து கருத்துக் கூறுகையில், கலைக்குமாறு கோரி நாடாளுமன்றம் ஒரு பிரேரணையை நிறைவேற்றினாலும் கூட, நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதி அரசமைப்புச் சட்டரீதியாக கட்டுப்படவில்லை என்று கூறுகிறார்.

நாடாளுமன்றக் கலைப்பு விவகாரத்தில் அரசும் ஜனாதிபதியும் எதிரும் புதிருமாக இருந்துவரும் நிலையில், முன்னாள் சபாநாயகரும் பொ.ஐ.முன்னணி எம்.பியுமான அநுரா பண்டாரநாயக்க வேறொரு கருத்தைக் கூறியிருக்கிறார்.

"அரசைத் தொடர்ந்து நடத்தமுடியாததால் பெரும்பான்மை வாக்குகள் மூலம் நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு பிரதமர் ரணில் கோரினால், அரசமைப்புச் சட்டப்படி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுள்ள ஒருவரை புதிய அரசை அமைக்க ஜனாதிபதி அழைக்க நேரிடும்" என்று அவர் கூறுகிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கருத்துக் கூறுகையில்:-

நாடாளுமன்றத்தைக் கலைப்பதா, இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும பொறுப்பு ஜனாதிபதிக்கே உண்டு என்று தெரிவித்திருக்கிறார்.

சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேன இது தொடர்பாகத் தெரிவிக்கையில், நாடாளுமன்றத்தைக் கலைத்து பொது தேர்தலை நடத்தும் எண்ணம் ஜனாதிபதிக்கோ, பொ.ஐ.முன்னணிக்கோ இல்லையெனக் கூறினார். (ஐ)

சொத்துக்களை காப்புறுதி செய்த

# தென்மராட்சி வாசிகளுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஒக்.20

தென்மராட்சிப் பகுதியில் கடந்த கால யுத்த அனர்த்தங்களின்போது வீட்டு உடைமைகளை இழந்த - அதேவேளை அவற்றுக்கு ஏற்கனவே காப்புறுதி செய்திருந்தவர்களுக்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நஷ்டஈடுக் கொடுப்பனவுகளை வழங்கி வருவதாக கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் திருமதி ஆர்.எவ்.அரியநாயகம் தெரிவித்துள்ளார்.

இனக்கலவரம், பயங்கரவாதம், குரோதம் மற்றும் தீ அபாயம் போன்ற காப்புறுதித் திட்டங்களின் கீழ் தமது வீட்டு உடைமைகளைக் காப்புறுதி செய்தவர்களுக்கே அவர்கள் காப்புறுதி செய்த தொகைகளுக்கேற்ப நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் -

இதன் அடிப்படையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் தமது வீட்டு உடைமைகளைக் காப்புறுதி செய்துள்ள 15 பேர்களில் தற்போது முதற்கட்டமாக 4 வீட்டு உரிமையாளர்களுக்கு மொத்தமாக சுமார் 7லட்சத்து 25ஆயிரம் ரூபா நஷ்டஈட்டுக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது என்றும் -

எஞ்சியவர்களுக்கு உரிய நிதி கிடைத்ததும் விரைவில் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் - அவர் தெரிவித்தார். (எ-5)

# புலிகள் வசமுள்ள முஸ்லிம் இளைஞர்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள் - ஜனாதிபதி

கொழும்பு,ஒக்.20

"புலிகள் தடுத்துவைத்திருக்கும் முஸ்லிம் இளைஞர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுங்கள்."

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எழுதிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு வற்புறுத்தியுள்ளார்.

கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

1989ஆம் ஆண்டு முதல் 1991ஆம ஆண்டு வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் 29 முஸ்லிம் இளைஞர்கள் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரசும் புலிகளும் தம்வசமுள்ள கைதிகளை விடுவித்து வருகிறார்கள். ஆனால், புலிகள் வசமுள்ள பொது மக்கள் விடுவிக்கப்படவில்லை. இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு அறிவியுங்கள். தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்.

இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்கள் அமைப்பு,மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையே மேற்கோள் காட்டி ஜனாதிபதி தனது கடிதத்தை எழுதியுள்ளார்.

இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருந்த காலப்பகுதியிலேயே முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி தனது கடிதத்தில் மேலும் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# மலையக அரசியல் தலைவர்களின் செயற்பாடுகள் பற்றி சந்திரசேகரன்

கொழும்பு,ஒக்.20

மலையக அரசியல் தலைவர்களின் செயற்பாடுகள் இளைஞர்களுக்கு தன்னம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளிப்பவையாக அமைய வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் சமூக அபிவிருத்தி அமைச்சரும் நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ பிரதி அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

கந்தப்பளை, நானுஓயா, வலப்பனை, இராகலை, உடபுசல்லாவ போன்ற பகுதிகளில் உள்ள தோட்டங்களில் தபால் நிலையங்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

நமது வாழ்க்கையில் திருப்திபடையக்கூடிய எந்த அர்த்தமுமே இல்லாததாலேயே இன்றைய இளைஞர்கள், மட்டுமல்லாது முழு மலையக மக்களுமே ஒரு விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அமைச்சர்களாகவோ சமூகத்தின் தலைவர்களாகவோ இருக்கும் நாம், எமது செயற்பாடுகளினூடாக இவர்களின் வாழ்க்கை உயர்வுக்கான நம்பிக்கையைக் கொடுக்கவேண்டும். அமைச்சு அந்தஸ்து, அமைச்சு அதிகாரங்கள் என்பவற்றை விடவும் அமைச்சின் ஊடாகக்கிடைக்கும் வளங்கள் எமது சமூக முன்னேற்றத்துக்காகப் பயன்படவேண்டும் என்பதில் நான் அதிக அக்கறையாக உள்ளேன்.

நான் ஒவ்வொரு தோட்டத்துக்கும் செல்லும்போதெல்லாம் வேலை கேட்டு இளைஞர்கள் நூற்றுக் கணக்கில் கடிதங்கள் கொடுக்கின்றார்கள்.

வேலையில்லாப் பிரச்சினை இன்று மலையக இளைஞர்கள் மத்தியில் விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதனை நாம் அசட்டை செய்யமுடியாது. இதற்கான வேலைத்திட்டங்களையும் நாம் வகுக்கவேண்டும். அல்லது எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் துரோக மிழைத்தவர்களாகிவிடுவோம். இதன் காரணமாகவே எமது அமைச்சின் ஊடாக சுயதொழில் வாய்ப்பிற்கான கடனுதவித் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளேன் - என்றார் அவர். (எ)

# படையிலிருந்து தப்பியோடிய 45 ஆயிரம் பேரை கைது செய்ய விசேட சோதனை நடவடிக்கை

## பொலீஸ் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.20

இராணுவத்திலிருந்து தப்பி ஓடி குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருபவர்களை கைதுசெய்வதற்காக மாவட்டங்கள்தோறும் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலீஸ் மா அதிபர் ஈ. ஆனந்தராஜா தெரிவித்தார்.

இதற்கமைய மாவட்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர்களின் கண்காணிப்பின் கீழ் விசேட பொலீஸ் குழுக்கள் அமைக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

தப்பியோடிய இராணுவ வீரர்கள் தொடர்பான தகவல்கள் இராணுவத் தலைமையகத்திலிருந்து பெறப்படும். இவர்கள் தொடர்பான தகவல்கள் தெரிந்திருப்பின் அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களிலோ அல்லது இராணுவ முகாம்களிலோ பொதுமக்கள் முறைப்பாடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தப்பியோடியவர்களின் எண்ணிக்கை 45 ஆயிரம் என்றும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. இவர்களில் 50 சதவீதமானவர்கள் தொடர்ந்தும் குற்றச் செயல்களில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிய வந்துள்ளது. (எ)

# பொறுப்பேற்கப்படாமல் இருக்கும் பரந்தன் வயோதிபரின் சடலம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்திய நிலையில் கடந்த 11ஆம் திகதி உயிரிழந்த வயோதிபரின் சடலம் இதுவரையிலும் எவராலும் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளது.

பரந்தன் 5ஆம் வாய்க்கால்ப் பகுதியைச் சேர்ந்த கே.கருணாகரன் (வயது 80) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 7ஆம் திகதி யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இவர் நான்கு நாள்களின் பின், கடந்த 11ஆம் திகதி மரணமானார்.

வைத்தியசாலைப் பிரேத அறையில் பாதுகாக்கப்பட்டுவரும் இவரது சடலத்தை, உறவினர்கள் வந்து பொறுப்பேற்கும்படி வைத்தியசாலை நிர்வாகத்தால் கோரப்பட்டுள்ளது. (ம-15)

காஞ்சிரங்குடாச் சம்பவம்:

# மனித உரிமைகள் ஆணைக்குழு முன் பொதுமக்கள் முண்டியடித்து சாட்சியம்

காரைதீவு,ஒக்.20

காஞ்சிரங்குடா சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க பொதுமக்களும் பொது நல அமைப்புக்களும் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் முண்டியடித்ததைக் காணமுடிந்தது. மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளர் சரத்குரேயைத் தலைவராகக் கொண்ட இந்த விசாரணைக்குழு திருக்கோவில் பிரதேச செயலகத்தில் விசாரணைகளை மேற்கொண்டது.

காஞ்சிரங்குடா சம்பவத்தில் படுகொலையுண்ட எம்.சசிகுமார் சார்பில அவரது தாயார் தம்பிராஜா நிர்மலா தேவி, வி.ஜெயப்பிரகாஷ் சார்பில் வினோதர்மகீர்த்தி, என்.சசிகுமார் சார்பாக பூபாலபிள்ளை சௌந்தரராணி, ஏ.சிவக்குமார் சார்பாக ஆறுமுகம் பூமணி, எம்.குமாரகுலசிங்கம் சார்பாக சுப்பிரமணியம் யோகேஸ்வரி ஆகியோர் தனித்தனியாக சாட்சியங்களை வழங்கினர்.

படுகாயமுற்ற ஞானசுந்தரம் பிரதீபன் (வயது 14), இராசமாணிக்கம் துஷ்யந்தன் (வயது 19), பாலசுந்தரம் இந்திரகுமார் (வயது 23), மாணிக்கம் வதனராஜன் (வயது 31), கிருஷ்ணபிள்ளை தேவராஜா (வயது 21) ஆகியோரும் அங்கு சாட்சியமளித்தனர்.

காஞ்சிரங்குடா சம்பவ விசாரணைக் குழுவில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதியான பட்டதாரி ஆசிரியரும், ஊடகவியலாளருமான சாமித்தம்பி விவேகானந்தனும் அங்கு சமுகமளித்திருந்தார். திருக்கோவில் பிரதேச செயலாளர் ஏ.கே.தவராஜா விசாரணைக்கான ஒழுங்குகளை செய்திருந்ததாக கல்முனைப்பிராந்திய மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளர் இரா.மனோகரன் தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் காஞ்சிரங்குடா படைமுகாமிற்கு சென்றபோது, அங்கு பொறுப்பதிகாரியையும் சம்பந்தப்பட்ட படையினர்களையும் சந்திக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டதாகக் கூறப்படுகிறது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அம்பாறை மாவட்டத் தலைவர் கார்ல், உதவிப் பொறுப்பாளர் அன்சாபி ஆகியோருடன் குழுவினர் கலந்துரையாடினர். (எ)

# உள்ளத்தைத் தொடும் கண்ணனின் கீர்த்தனைகள்



| | |
|---|---|
| பெயர்:- | வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கீர்த்தனைகள். |
| இயற்றியவர்:- | பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர். |
| வெளியீடு:- | மேற்படி தேவஸ்தானம். |

காத்தற் கடவுளாகிய ஸ்ரீமகா விஷ்ணு தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும், துயரங்களையும், இன்னல்களையும், இடுக்கண்களையும் நீக்குதற்பொருட்டு எழுந்தருளி வீற்றிருந்து அருள்புரியும் ஆலயம்தான் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில்.

இங்குள்ள பெருமாள் மீது பாடப் பெற்ற அருமையான கீர்த்தனைகள், அடங்கிய நூல்தான் 'வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கீர்த்தனைகள்' ஆகும். இந்நூல் ஒரு அரிய கிடைத்தற்கரிய பொக்கிஷமாகும். கண்ணபரமாத்மாவின் அருட்பெரும் கருணைத்திறம் இந்தப் பாடல்களில் மிகவும் ஆழமாகப் பதிந்துள்ளது. ஒவ்வொரு கீர்த்தனையிலும் ஒரு தனி அழகு பொதிந்துள்ளதை அதனை ஊன்றிப் படித்தவர்கள்தான் உணர்ந்து கொள்ளமுடியும். அத்தனையும் தத்துவ முத்துக்கள். ஒவ்வோர் அடியிலும் பக்திரசம் ஊற்றெடுக்கின்ற பாங்கு போற்றுதற்குரியது.

இந்தப் புத்தகத்தின் முன்பக்க அட்டை மிகவும் அழகுடன் பக்தியை ஏற்படுத்தக்கூடியமுறையில் அச்சிடப்பட்டுள்ளது. வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலின் அழகிய முகப்புத் தோற்றம் அட்டையை மூவர்ணத்தில் அலங்கரிக்க, முன்னே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சங்கு சக்கரத்துடன் காட்சியளிக்கின்றார். கையில் எடுத்தவுடனேயே கண்ணில் ஒற்றிக்கை தொழுது பூஜை அறையில் வைக்கவேண்டும் போலிருக்கின்றது என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்ற இந்த அரிய நூல், பெருமாள் பக்தர்களுக்கு ஒரு அரிய பொக்கிஷமாகும்.

யாழ்ப்பாணம் இணுவையூர், மஹாவித்துவான் வீரமணி ஐயரின் கவித்துவம் இங்கே தெற்றெனப் புலப்படுகின்றது. கிருஷ்ணபரமாத்மாவின் லீலைகள் ஆனந்தமயமான அருட்பொலிவோடு, ஜனரஞ்சகமாகப் பாடப்படும்போது உண்மையான தெய்வபக்தியையும், ஆத்மார்த்தமான தெய்வீக உணர்வையும் ஏற்படுத்தும் பாடல்களாக அமைந்துள்ளன எனக் கூறினால் அது மிகையாகாது. 106 கீர்த்தனைகளும் ஒரு அர்ச்சனை மாலையும் சேர்ந்து, 108 மாலைகள் கண்ணனை அலங்கரிக்கின்றன.

இது வைஷ்ணவ ஆழ்வார்களது பக்தி மேம்பாட்டினை எடுத்தியம்புகின்ற நாலாயிரத்திவ்ய பிரபந்தம் போன்று நமது யாழ் மக்கள் மத்தியில் பெருமாளின் பெருமையைப் பேசுகின்ற தனிப்பெரும் நூலாக வெளிவந்திருக்கின்றது என்று கூறின்

கவிமணி இராசையா ஸ்ரீதரன்

அது சாலப்பொருந்தும்.

மொத்தத்தில் இந்தக்கீர்த்தனைகள் பெருமாளின் அருட்கருணைத் திறத்தையும், லீலைகளின் செயற்பாட்டு, வளங்களையும், எடுத்துக்கூறி பக்தர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு நல்லதோர் இடத்தைப்பெற்றிருக்கின்றது நாம் செய்த பெரும் பாக்கியமாகும்.

ஒவ்வொரு பாடலுக்கும் அதற்கேற்றவாறு, தலையங்களுமிட்டு

## நூல்விசை

படியோர் உள்ளத்தைத் தொட்டுக்கொள்ளை கொள்ளக்கூடியவகையிலே அச்சிடப்பட்டிருப்பது பாராட்டத்தக்கதொரு அம்சமாகும். மேலும், இந்த நூலானது கையடக்கமான அளவில் தெளிவான எழுத்துக்களில் அழகாக அச்சிடப்பட்டிருப்பதால் சிறியோர் முதல் பெரியோர் வரை படித்து இன்புறத்தக்கதாக உள்ளதென்பது விசேடமான ஒன்று. ★

# வெளிநாட்டுக் கலைஞர்களின் சிற்ப, ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்ப்பாணத்தில் வசித்துக்கொண்டு, அதேவேளை தொழில் புரியும் வெளிநாட்டுக் கலைஞர்களின 'அதிசயக் கண்களினூடாக யாழ்ப்பாணம்' என்னும் பொருளிலான ஓவிய, புகைப்பட, சிற்பக் கண்காட்சி நாளை 21ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 31ஆம் திகதி வரை தினமும் காலை 10மணி முதல் மாலை 5 மணிவரை யாழ். முத்தா வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலா மன்றக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ள பொருள்களின்மூலம் கிடைக்கும் வருமானத்தை தர்ம நிலையங்களுக்கு வழங்கப்போவதாக வெளிநாட்டுக் கலைஞர்கள் அறிவித்துள்ளனர். (எ-8-5)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கடைப்பாவனைக்குரிய 5 அடி நீளமும் 3 அடி உயரமும் உடைய தேக்கினால் செய்யப்பட்ட கண்ணாடி ஷோக் கேஸ் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.விஜயன், 35/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (9637)

சகல வசதிகளுடன் கூடிய கடை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் விற்பனைக்கு உண்டு. (மாலை 5 மணிககுப் பின் தொடர்புகொள்ளவும்) செ.மகாலிங்கம், இல.7, யாழ்வீதி, பலாலி றோட், யாழ்ப்பாணம்.(9680)

**OSAKI VCD (JAPAN), MULTY SYSTEM SONY 21" T.V. (STEREO), EN-7325 MINOR** கார், **SERVEL** வகை. **AVR 3KW (3000W) OUT PUT** ஸ்டப் லேய்சர் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: உ.பாலசுப்பிரமணியம், (உததரவுபெற்ற நில அளவையாளர்) துன்னாலை மத்தி, கரவெட்டி. (9595)

மிகநல்ல நிலையிலுள்ள யமஹா மேற் - 80 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 109, இராசாவின் தோட்டம் வீதி. யாழ்ப்பாணம் தொலைபேசி: 2223130. (9695)

மூன்று வருடங்களில் பலன் தரக் கூடிய நல்லின கயூமரக் கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 232, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (9663)

சிசில் **R 80** பிறிஜ் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.கிறிஸ்ரி, **No.27/13.** புங்கன்குளவீதி, யாழ்ப்பாணம். (9685)

நல்ல இன **Dachund** நாய்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9658)

தரமான புறொயிலர்கள், கல் பேட்ஸ் என்பன விற்பனைக்குண்டு. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் **1kg 220/=** மட்டும். தொடர்பு:- S.குமரன், 227, பிறவுண் வீதி, (நரிக்குண்டுக் கருகில்) யாழ்ப்பாணம். (9632)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. **1Kg** 130/- சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம். பகிரா இன புறொயிலா குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. **T.P.:3529, 2867.** (9636)

**Prima, Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் **(Electronic** நிறுவை), 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(9511)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மிகவும் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. மொத்த கொளவனவுகளுக்கு விசேட விலைக்கழிவுகள் உண்டு. தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (9654)

## வீடு விற்பனைக்குண்டு

திருநெல்வேலி, பலாலி வீதியில் தபாற் பெட்டியடியில் 4 அறைகளுடன் நாற்சார் வீடு விற்பனைக்கு உண்டு. 106, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கில் (விற்பனைக்குள்ள வீட்டின் அருகில்) உள்ள உரிமையாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். (9648)

## வீடும் காணியும் விற்பனைக்கு

31/2 பரப்புக் காணியில் நன்னீர்க் கிணற்றுடன் அமைந்த வீடும், 21/2 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 193, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். **T.P No.**021-222 2300. (9635)

## கோழிக்குஞ்சு விற்பனை

**Prima, Broiler** குஞ்சுகள் **Prima** பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு தொடர்பு 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9657)

## வளர்ப்பு மீன்கள்

கலர் மீன்கள், மீன்தொட்டி உபகரணங்கள், **Air Pump** தாவரங்கள் விற்பனைக்கு உண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9519)

## குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு

இரண்டு கதவுகளைக் கொண்ட புதிய குளிர்சாதனப் பெட்டியும், மிகவும் நல்ல நிலையிலுள்ள 142 தொடர் இலக்கத்தைக் கொண்ட **12N Bajaj Scooter** உம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: "நில்கந்தா", யாழ்.வீதி, மானிப்பாய். (நாயகபாலன் ஸ்ரோர்ஸுக்கு முன்பாக) (9646)

## காணி விற்பனைக்கு

யாழ்.சுண்டுக்குளி மொரிஸ் ஒழுங்கையில் 1 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திரு.நிக்லஸ், 841, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (9682)

கொக்குவில் கிழக்கு, கொக்குவில்-திருநெல்வேலி (ஆடியபாத வீதியில்) அம்பட்டப் பாலத்தருகில் 5 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு:- செல்வநாயகம், இல.05, கோயில் வீதி, கொக்குவில் (தரகர் தேவையில்லை). (9604)

கல்வியங்காடு பருத்தித்துறை வீதியிலிருந்து 200 யார் தொலைவில், புலவனார் ஒழுங்கையில் கிணறு மற்றும சிதைவுண்டுள்ள அத்திவாரத்துடன் 11/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: து.மகாதேவன், **(P.H.I)** கட்டப்பிராய், இருபாலை.(9687)

## மருந்து விற்பனைக்கு

நாய்களுக்கு உரிய **Parvo, Distemper, Rabies,** ஆடு, மாடுகளுககுரிய **MFC Calcium,** கோழிகளுக்குரிய **CRD, Gampura, Raniket Fow/Pox** மற்றும் சகல கால்நடை மருந்துகளும் எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (9517)

## தவறிவிட்டது

சுழிபுரம் தெற்கு, சுழிபுரம் என்னும் முகவரியைச் சேர்ந்த முருகமூர்த்தி பத்மாவதி என்பவருடைய தேசிய அ.அ. (இல.495751295V) நவாலிக்கும், வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும்.(9667)

## திருமண சேவை

1964, சுவாதி, பாவம் குறைந்த **France** மணமகனுக்கு நகைத் தொழிலுடன் ஈடுபாடுள்ள மணமகள் தேவை **Sponser** உண்டு. தொடர்பு:- துரை விமலா நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (9591)

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேலை செய்யும் இந்து, கிறிஸ்தவ மணமக்கள் முழுவிவரங்களுடன் உண்டு. சகல நாள்களிலும் நேரில் தொடர்பு கொள்ளலாம். திருப்தியான; துரிதமான சேவை. தொடர்பு:- கு.திருவிளங்கம், வாசிகசாலை ஒழுங்கை, 3ஆம் கட்டையடி, கல்வியங்காடு. (9644)

## தேவை

சமையலுக்கு ஒரு பெண்ணும், தோட்டம் பராமரிப்பதற்கு ஒரு ஆணும் தேவை. ஊக்கமாக வேலை செய்தால் நல்ல சம்பளம் தரப்படும். உடன் நேரில வரவும். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9659)

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1961-11-24ஆம் திகதி மிருகசீரிடம் 8இல் செவ்வாய், சுயமாகத் தொழில் செய்யும் மணமகனுக்கு தகுதியான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ச.கனகசபை, பூதராயர் கோயில் ஒழுங்கை. பருத்தித்துறை. (9598)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அனுஷ நட்சத்திரம், 31 வயதுடைய அரச பணியாற்றும் பட்டதாரி மணமகனுக்கு, பொருத்தமான தொழில் பார்க்கும் மணமகள் தேவை. தொடர்பு: செல்லப்பா சுப்பிரமணியம், இளைப்பாறிய ஓவசியர், செம்பாடு, தூதாவளவு, கரணவாய், கரவெட்டி. (9335)

## வகுப்புகள்

ஆங்கில, சிங்கள வகுப்புகள் 2002.11.01 தொடக்கம் அடிப்படையில் இருந்து ஆரம்பமாக இருக்கின்றன. குறிப்பிட்ட தொகையினரே அனுமதிக் கப்படுவர். தொடர்பு:- அ.இராஜரட்ணம், 56, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு (கல்வியங்காடு). (9655)

## ஜோதிடம்

உங்கள் ஜாதக பலன்களை அறிந்திடவும், திருமணப் பொருத்தம், எண் கணித பலன்கள் அறிந்திடவும் உடன் தொடர்பு கொள்ளவும். அத்துடன் திருமண சேவையும் செய்யப்படும் தொடர்பு- N.கந்தையா, மூத்த விநாயகர் கோயிலடி, ஆனைகோட்டை. (9478)

## 2002 ஒக்ரோபர் 9ஆம் திகதி அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று, காஞ்சிரங்குடாவில் நடந்த சம்பவங்கள் தொடர்பான விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு

கௌரவ பிரதமரின் ஆலோசனைப்படி கௌரவ உள்துறை அமைச்சரினால் மேற்படி சம்பவம் பற்றி விசாரணை செய்து அறிக்கையிடுவதற்கான குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இக்குழு பொதுமக்களின் சாட்சிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2002 ஒக்ரோபர் 21ஆம் திகதியிலிருந்து 23ஆம் திகதி வரையிலான காலத்தில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 1.30 மணிவரையும், பி.ப. 2.30 மணியிலிருந்து பி.ப. 5.00 மணிவரையும் 24ஆம் திகதி மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 1.30மணி வரையும் திருக்கோவில் மாவட்ட செயலகத்தில் கூடவுள்ளது. அதன் பின்னர் மேலும் சாட்சிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒக்ரோபா 25ஆம், 26ஆம் திகதிகளில் மு.ப. 10.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணிவரை பண்டாரநாயக்க சாவதேச மாநாட்டு மண்டபத்தில் இல. 2/218 ஆம் அறையில் கூடவுள்ளது.

இது தொடர்பாக ஆர்வமுள்ள பொதுமக்கள் மேற்குறிப்பிட்ட நாள்களில் முன் வந்து காரணிகள/சாட்சிகளை சமர்ப்பிக்குமாறு அறிவிப்பதோடு, ஏதேனும் ஒரு காரணத்தினால் பிரத்தியேகமாகச் சமுகமளிக்க முடியாதாயின் சத்தியக கடுதாசி ஒன்றின் வடிவத்தில் சமாதான நீதிவான் ஒருவரால் சான்றுப்படுத்தி தமது காரணிகளை/சாட்சிகளை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகின்றது.

**ஓய்வு பெற்ற எயார்வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக**
தலைவர் (தொலைபேசி இல. 698946)
**ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி திரு.ஓ.பி. வீரசிங்க**
அங்கத்தவர்
**திரு. சாமித்தம்பி விவேகானந்தன்** - அங்கத்தவர்

அறை இலக்கம் 2/210,
பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபம், கொழும்பு - 07
2002 ஒக்ரோபர் 10ஆம் திகதி.

எம்.ஜே.சவங்கன்,
குழுவின் செயலாளர்.

(C/24303)

## நாயன்மார்கட்டு முறிவு நெரிவு வைத்தியசாலை
### மீண்டும் அதே இடத்தில் இயங்குகின்றது

பரம்பரை வைத்திய கலாநிதி ஏ.உமாகாந்தன் அவர்களால் இதுவரை காலமும் இயங்கி வந்த நாயன்மார்கட்டு வைத்தியநிலையம் 15.10.2002 விஜயதசமி அன்று டாக்டர் ஏ.உமாகாந்தன் அவர்களின் விருப்பத்திற்கு அமைய அமர்த்தப்பட்டுள்ள டாக்டரால் நடத்தப்பட்டு வருகின்றது என்பதனை எமது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

*முக்கிய குறிப்பு: சகல ரோகங்களுக்கும் வைத்தியமும் ஆலோசனைகளும் வழங்கப்படும்*

நாயன்மார்கட்டுமுறிவு நெரிவு வைத்திய நிலையம்,
*நாயன்மார்கட்டு, நல்லூர்.*

திருமதி ஜெ.உமாகாந்தன்
மனைவி.

(9681)

## சிலிங்கோ வீட்டுத்தாதியர் சேவை

**பெற்றோரே!**

உங்களைப் பராமரிக்க உங்கள் அருகில் பிள்ளைகள் இல்லையே என்று கவலையா?

வீட்டில் நோயாளரைப் பராமரிக்க ஒருவர் இல்லையே என்று குறையா? கவலையை விடுங்கள்! உங்கள் குறையை நிவர்த்தி செய்ய

இதோ! தேசமானிய லலித் கொத்தலாவலையின் சேவைகளின் ஒன்றான பயிற்றுவிக்கப்பட்ட உதவித் தாதியர் நிறுவனம் உங்களுக்கு உதவிக் கரம் நீட்டக் காத்திருக்கிறது.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
**சிலிங்கோ கூட்டு நிறுவனம்**
**சிலிங்கோ வீட்டுத் தாதிய நிறுவனம்**
முதலாம் மாடி,
173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(9686)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 82/1, அரசடி வீதியில் வசிப்பவரும் முன்னாள் புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயக ம.வி. அதிபரும், தீவக வலயத்தில் திட்டமிடல் உதவிப் பணிப்பாளராக கடமையாற்றி இளைப்பாறியவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவக அமைப்பாளரும் சிறந்த சமூகசேவையாளருமாகிய

**நாகனாதி தருமலிங்கம்**

அவர்கள் நீதிவான் திருமதி ச.இளங்கோ அவர்கள் முன்னிலையில் 11.10.2002 அன்று சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அவர் நீண்ட ஆயுள்பெற்று, சேவையாற்ற வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சிறிவாணி நகைமாடம்**
173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(9691)

## விற்பனைப் பிரதிநிதி, வாகன சாரதி தேவை

**வயது: 25-45**

. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு வாகனத்தில் சென்று பொருள்களை விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதி, வாகனசாரதி (வாகன சாரதி அனுமதிப் பத்திரம் உடையவர்) தேவை. முன்னனுபவமும், நற்பண்பும், பொறுமையும் உடையவராக இருத்தல் அவசியம். அண்மையில் பெற்ற கிராமசேவகர் மற்றும் இரண்டு தொழில் அதிபர்களின் சிபார்சுக் கடிதங்களுடன் விண்ணப்பிக்கவும்.

✳ *விற்பனைப் பிரதிநிதி:-* ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவராய் இருப்பதுடன் உங்களது சுயவிவரங்கள் அனைத்தும் சுயகையெழுத்துடன் அமையவேண்டும். இத்துடன் கல்விச் சான்றிதழையும் ஏனைய சான்றிதழையும் இணைத்து அனுப்பவும்.

உங்களது விண்ணப்பங்களை 30.10.2002ஆம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
**விள.இல. - 1676, மே/பா உதயன்.**

(9650)

## திருமதி ஆனந்தி சூரியஜீவனின் இறுதி நிகழ்வு

16.10.2002 அன்று கனடாவில் இறைபதமடைந்த
**திருமதி ஆனந்தி சூரியஜீவன்**
அவர்களின் இறுதி நிகழ்வுகள் பின்போடப்பட்டுள்ளதால், ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி 22.10.2002 செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவிருந்த திருப்பலி இடம்பெறமாட்டாது.

*தகவல்:*
திருமதி C.M.மரியாம்பிள்ளை
5, பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(9684)

## 11ஆம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு
16 - 10 - 1958



உதிர்வு
23 - 10 - 1991

**அமரர் லோகநாதன் திலகவதி**

*திதி:* 20.10.2002

இனியவளே! உன்வாழ்வு அவனியிலே உயர்ந்திடவே
தனித்துவ மாகநல் தூயபணி செய்தாயே
கனியாத வேளைதனில் கிளையதனை நீ பிரிந்து
தனிமைதனை தேடிவிட்டாய் தவித்து மனம் வாடுகிறோம்.

*ஆக்கம்:* அல்வையூர் கே.ஆர்.திருத்துவராசா.

*கொற்றாவத்தை,*
*மலையந்தோட்டம் (திலகாலயம்).*

கி.லோகநாதன்
குடும்பத்தினர்.

(9683)

# நேர்மையும், மதிக்கும் பண்புமே உண்மையான உறவை வளர்க்கும்

"கடவுள் வடிவில் விளங்கிய அவர்..... சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே, கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருககு அருளினார்." (பிலிப்2:6-9) இது இயேசுக் கிறிஸ்துவிலே விளங்கிய மனநிலையாகும். நாம் எம்மாத்திரம். எம்மிலே அகந்தை, மற்றவரை இழிவாகப் பழித்துரையும் ஆணவம், கண்ணால் காணாதவற்றுக்கு கண், காது

## ஞாயிறு நற்பிரசாதம்

, மூக்கு வைத்துக் கதைகட்டி எம்மை உயர்வு படுத்திக்கொள்ளும் இயேசுக் கிறிஸ்துக்கு முற்றிலும் எதிரான நிலை இவற்றினாலே, நாம் நட்பையோ, ஒற்றுமையையோ, நல்ல பெயரையோ, காத்துக்கொள்ள முடியாது. பவுலடியார் கூறுவதுபோன்று 'தோழமையும், பரிவுள்ளமும் இரக்கமும் கொண்டுள்ளீர்களா?.... கட்சி மனப்பான்மைக்கும், வீண் பெருமைக்கும் இடம் தரவேண்டாம். மனத் தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவராக கருதுங்கள்' என்கிறார்.

நாம் எவ்வாறு வாழுகின்றோம். எம்மை உயர்வாகக் கருதி மற்றவர்களை ஒரு பொருட்டாகக் கருதுகின்றோம். எம்முடைய குறைபாடுகள் மற்றவர்களுக்குத் தெரியாது என்று நினைத்துக் கொள்ளுகின்றோம். ஆனால், கடவுளுக்கு அவை எல்லாம் வெளிச்சமானவை. எனவே தண்டனையில் இருந்து யாரும் தப்பமுடியாது. எப்படித் தப்பமுடியும் என்றால் *கிறிஸ்து இயேசுவிலே இருந்த மனநிலை எம்மில் வளரவேண்டும்.* அப்போது இறைவனின் சினம் தணிந்து எமக்கு மன்னிப்புக் கிடைக்கும். இல்லையேல் தண்டனை நிச்சயமானது. *நேர்மைத் தன்மையும் மற்றவரை மதிக்கும் மனநிலையுமே உண்மையான உறவை வளர்க்கும்.*

குடும்பங்களையோ, சமூகங்களையோ, நாடுகளையோ, எடுத்துக் கொண்டால் எம்மிடையே, பிணக்குகள் மேலும் மேலும் வளரக் காரணம் ஒருவரை ஒருவர் மதிக்கா நிலையும், நம்பாநிலையுமாகும். இவற்றினால் உறவுகள் நிச்சயம் சிதைவடையவே செய்யும். எப்போது நம்பிக்கையும், மதிப்பும் நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கின்றோமோ, அப்போதே நல்லுறவுகளையும் தொடர்புகளையும் பகிர்வுகள், பரிமாற்றங்களையும் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இறைவனிலே கொண்டுள்ள நம்பிக்கையானது நாளுக்கு நாள் கட்டியெழுப்படும் ஒன்றாக அமையவேண

**அன்ரனி பீற்றர்**

டும். அது தேயும்நிலை ஏற்பட முன்னைய செயற்பாடுகள் காரணமாக அமைகின்றன. எனவே, செப வாழ்வும், இறைதியானமும், இறைபுகழும் எம்மில் இறை நம்பிக்கையை வளர்பதுடன் மற்றவரை மதிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் உள்ளுணர்வு பிறக்கும். இல்லையேல் போலி வாழ்வே எம்மல் வாழும். இயேசுக் கிறிஸ்துவிலே நம்பிக்கையைக் கட்டி எழுப்பி எம்வாழ்வின் தீமைகளை அகற்றி, புது வாழ்வுக்கு எம்மை வழிப்படுத்துவோம். ★

# கலையுலகில் தனியிடம் வகித்தவர் இசைநாடக நடிகர் சரவணமுத்து

**1945**ஆம் ஆண்டு இசை நாடக உலகிலேயே தடம்பதித்து இறுதி மூச்சுவரை அதற்காக உழைத்த ஒரு ஜீவன் அடங்கிவிட்டது. ஒரு மூத்த இசைக்கலைஞன், இசை நாடகத்துறையின் நடிகன், பழகுவதற்கு இனிய பண்பாளன். ஆர்மோனிய ஆசிரியர், இணுவையூர் அமரர் வேலுப்பிள்ளை சரவணமுத்து அவர்கள்.

யாழ்ப்பாணத்தில் இணுவையூரிலே வாழ்ந்து வந்த நாடக வல்லுநர் வேலுப்பிள்ளைக்கும் அன்னலட்சுமிக்கும் ஏக புதல்வனாக 1921ஆம் ஆண்டு மாசித் திங்கள் 2ஆம் நாள் சரவணமுத்து அவர்கள் பிறந்தார். ஐந்து வயதிலே தற்போது கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் என பெயர்பெறும் பாடசாலையிலே ஆரம்பக்கல்வியை தொடங்கி குடும்ப நிலைமை காரணமாக மூன்றாண்டுகளோடு படிப்பை பாதியிலே நிறுதத்திவிட்டு சிறு கைத்தொழிலிலே ஈடுபட்டு காலத்தை கழிக்கையிலேதான், அப்போது வளர்ந்து பெரிதும் ரசிக்கப்பட்ட நாடக கலையின்பால் ஈர்க்கப்பட்டு விருப்பமும், பேரார்வமும் கொண்டார். அக்காலத்திலே இணுவிலிலே நாடகத்துறையை வழி நடத்தி வந்த மனேஜர் கதிர்காமு அவர்கள் சரவணமுத்து அவர்களின் நாடக பிரவேசத்திற்கு ஊன்றுகோலாக இருந்தார்.

அக்காலத்திலே மனேஜர் கதிர்காமு அவர்கள் இசையில் ஆர்வம்

**நீத்தார் நயப்புரை**

மிக்க சிறுவர்களை ஒன்று திரட்டி நாடகங்களை உருவாக்கி கோயில்களிலேயே அரங்கேற்றி அதனை வளர்த்து வந்தார். அவரை அணுகி சரவணமுத்து தனது நடிப்பின் பாற்பட்ட விருப்பத்தை தெரிவிக்கவே அவரும் இசைந்து அன்னாருக்குப் பொருத்தமானது பெண்பாத்திரமே என்று கூறி அவரைச் சேர்த்துக் கொண்டார். அவர் தனது பெண் பாத்திர நாடக பிரவேசம்மூலம் பிரகாசிக்கத் தொடங்கினார்.

முதன்முதலாக 'சாவித்திரி' இசை நாடகத்தில் சாவித்திரி பெண் பாத்திரத்தை ஏற்று நடித்து பலரின் பாராட்டுக்களைப் பெற்றார். அப்போது நடிப்புத்துறையிலே சிறந்து விளங்கியவர்களான நெல்லியடி ஆழ்வாப்பிள்ளை கன்னிகா பரமேஸ்வரி, இராசசிங்கம், நாகசிங்கம், எஸ்.கே. செல்லையாபிள்ளை போன்றவர்கள் பங்கேற்ற நாடகங்களைக் கண்டு தானும் அவ்வாறு நடிக்கவேண்டும் என்று ஆசைகொண்டார்.

அதன்பின் 'வள்ளி திருமணம்' நாடகத்திலே வள்ளியாகவும் 'பவளக்கொடி' நாடகத்திலே பவளக் கொடியாகவும் நடித்து பலரது பாராட்டுக்களையும் ஆசிகளையும் இவர் பெற்றார்.

அக்காலங்களிலே நாடகங்களுக்கு 'சர்மா மாஸ்ரர்' ஆர்மோ

**இ.இந்திரஜித்**

னியம் வாசிப்பது கண்டு தானும் ஆர்மோனியம் வாசிப்பதில் சிறந்தவராக வரவேண்டும் என்ற விருப்பில் அவரையே அணுகி தனது விருப்பத்தைக் கூற அவரும் இசைந்து ஆர்மோனியம் கற்றுக்கொடுக்க அதிலே தேர்ச்சி பெற்றார் சரவணமுத்து அவர்கள்.

இந்தியாவிலிருந்து விஸ்வநாதன் என்பவர் பதினைந்து பேர் கொண்ட நாடகக் கம்பனி ஒன்றை இலங்கைக்கு, அதாவது மட்டக்களப்பிற்குக் கொண்டுவந்தார். அது இலங்கையிலே ஒன்பது மாதகாலம் தங்கியிருந்து பல்வேறு இடங்களிலும் நாடகங்களை மேடையேற்றியபோது அன்னார் சரவணமுத்து அவர்களே அந்த ஒன்பது மாதகாலமும் ஆர்மோனியம் வாசித்து இசை உலகிலே தனக்கென ஒரு தனியிடத்தை ஒதுக்கிக்கொண்டார். ☆

## வடக்கு - கிழக்கு மாகாணசபையின்

# பதில் செயலர் நியமனத்தை ஆட்சேபித்து மனு தாக்கல்

கொழும்பு,ஒக்.20

வடக்கு - கிழக்கு மாகாணசபை பதில் செயலாளராக எஸ்.ரங்கராஜா நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானதெனவும், அதனை மீள் பரிசீலனை செய்யுமாறு உத்தரவிடுமாறும் கோரி வடக்கு - கிழக்கு மாகாணசபையின் கீழுள்ள அமைச்சின் செயலாளரொருவரால் வடக்கு - கிழக்கு மாகாண சபை ஆளுநருக்கு எதிராக மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணசபையின்கீழ் இயங்கும் ஐந்து அமைச்சுக்களின் செயலாளர்களில் சேவை மூப்பின் அடிப்படையில் தானே மூத்தவர் எனவும் -

சேவை மூப்பில் குறைந்த ஒருவரை இப்பதவிக்கு நியமித்ததன் மூலம் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் - மனுதாரர் அம்மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நியமனத்துக்கு ரங்கராஜாவின் பெயர் ஜனாதிபதியால் சிபார்சு செய்யப்பட்டதன் பேரில் ஆளுநரால் நியமனம் மேற்கொள்ளப்பட்டதெனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

# ஐ.நா. அமைப்பின் பிரதிநிதிகள் கொழும்புத்துறை விஜயம்

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் பிரதிநிதிகள் கொழும்புத துறைக்குச் சென்று அப்பகுதியில் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனா.

கொழும்புத்துறைப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான மகஜர்களை இப்பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் கடந்த வாரம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துக்கு அனுப்பி வைத்திருந்தன. இதனையடுத்தே மேற்படி பிரதிநிதிகள் கொழும்புத்துறைக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன் கலந்துரையாடலிலும் பங்கேற்றனர்.

கலந்துரையாடலில்:-

★ கொழும்புத்துறை பிரதேசத்தை வழமைக்குக் கொண்டுவரும் பொருட்டு இப்பகுதியில் உள்ள மக்களை மீண்டும் தமது சொந்த வீடுகளில் மீளக்குடியமர்த்துதல்

★ வீடுகளில்தங்கியிருக்கும் இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேற்றி அந்த வீடுகளைப் பொது மக்களிடம் ஒப்படைத்தல்.

★ மூடப்பட்டிருக்கும் விபுலானந்தர் வீதியை மக்கள் பாவனைக்கு திறந்து விடுதல்.

ஆகிய கோரிக்கைகளை பொது அமைப்புக்கள் வலியுறுத்தின.

இந்தக் கோரிக்கைகளுக்கு சாதகமான பதிலை விரைவில் பெற்றுத்தருவதாக அகதிகளுக்கான ஐநா தூதரகப் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-17)

## ஜனாதிபதிக்கு 'நோட்டீஸ்'!

கடந்த மாதம் 20ஆம் தேதி பிலிமத்தலாவையில் இடம்பெற்ற ஹெக்டர் கொப்பேகடுவ ஞாபகார்த்த விழாவில் கலந்துகொண்டு ஜனாதிபதி ஆற்றிய உரையானது தமது கட்சிக்காரராகிய சான் விக்கிரமசிங்கவின் கௌரவத்துக்கும், நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதால், தமது கட்சிக்காரரான சான்விக்கிரமசிங்கவுக்கு ஒரு கோடி 50 லட்சம் ரூபாவை மான நஷ்டத் தொகையாக வழங்குமாறு கோரி சமரரத்ன வழக்கறிஞர் நிறுவனம் ஜனாதிபதிக்கு 'நோட்டீஸ்' அனுப்பிவைத்துள்ளது.

இந்நோட்டீஸைப் பெற்றுக்கொண்ட நாளில் இருந்து ஒரு மாத காலத்துள் இந்த நஷ்டஈட்டுத் தொகையைச் செலுத்துமாறும் அப்படிச் செலுத்தத் தவறும் பட்சத்தில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும் அந்நோட்டீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

# மக்கள் முகம்



யாழ்.செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவுத் திணைக்களத்தில் சிங்கள, தமிழ் எழுதுவினைஞராகக் கடமையாற்றும் வாதவூரர் கலாதரன் அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பரமணியம் முன்னிலையில் மொழிபெயர்ப்பாளராகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

இவர் அளவெட்டி வடக்கு ஆசிரியத் தம்பதிகளான வாதவூரர் - நவமணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரி, வவுனியா விவசாய பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவருமாவார்.

இலங்கை சீனிக்கூட்டுத்தாபன முன்னாள் விவசாய அலுவலராகவும் கடமையாற்றிய இவர், யாழ். 'ஆற்றல்' மேம்பாட்டு ஒன்றியத்தின் இணைச் செயலாளரும், 'ஆற்றல்' சஞ்சிகையின் துணை ஆசிரியருமாவார். அளவெட்டி மகாஜன சனசமூக நிலைய உறுப்பினரான இவர் சிறந்த சமூக சேவையாளராகவும் சேவைகள் புரிந்துவருகிறார். (எ)

★ ★ ★



நல்லூர் தெற்கு, முதலியார் வீதியைச் சேர்ந்த செல்லையா தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனான விக்னேஸ்வரன் 'நாடாளுமன்றில் ஜனநாயக மரபுகள்' என்ற தலைப்பிலான கற்கைநெறி ஒன்றைப் பின்பற்றுவதற்காக அண்மையில் புதுடில்லி பயணமானார்.

இலங்கை நாடாளுமன்றத்தில் பொறுப்புவாய்ந்த அதிகாரியாகத் தற்போது கடமையாற்றிவரும் இவர், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கொழும்பு, இரத்தினபுரி மாவட்ட அலுவலகங்களிலும் பல உயர் பதவிகளை வகித்தும் உள்ளார்.


இவர் யாழ்.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தின் (ஸ்ரான்லிக் கல்லூரி) பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

★ ★ ★



கட்டுவனைச் சேர்ந்தவரும், சிறந்த சமூக சேவையாளரும், விளையாட்டு வீரரும் தமிழபிமானியுமான ஓய்வுபெற்ற நிலஅளவை உதவி அத்தியட்சகர் வல்லிபுரம் சின்னத்துரை கடந்த மாதம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நீதிபதி சுப்பிரமணியம் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். (எ)

★ ★ ★



தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவின் மட்டுவில் பிரிவு கிராம அலுவலராக கடமையாற்றிய சின்னையா கந்தசாமி அண்மையில் சேவை யிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

மட்டுவில் விவசாய சம்மேளனத்தின் தலைவராகவும், மட்டுவில் தெற்கு சோமாஸ்கந்தா சனசமூக நிலையத்தின் உப தலைவராகவும், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் மற்றும் விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை, மட்டுவில் தெற்கு சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் செயலாளராகவும் இவர் தற்போது பணியாற்றி வருகிறார். (எ-117)

★ ★ ★



மிருசுவில் மத்திய மருந்தகத்தில் கடந்த பத்து வருடங்களாகப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் பொ.வே.தம்பித்துரை அண்மையில் தனது 32 வருட சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

கண்டி, தம்புள்ள, பொலநறுவ, சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, கைதடி ஆகிய ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றிய இவர், கடந்த பத்து வருடங்களாக மிருசுவில் மத்திய மருந்தகத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றினார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் தலைவராக இவர் கடமையாற்றிய வேளையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் பல நலச்சேவைகள் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

# தேயிலை அரைக்கும் இயந்திரத்தில் சிக்கி இளைஞர் பலி; பொலீஸார் விசாரணை!

நுவரெலியா,ஒக்.20

தேயிலை அரைக்கும் இயந்திரத்தில் சிக்கி நுவரெலியா வார்விக் தோட்டம் கிளெஞ் டிவிசனைச் சேர்ந்த லோரன்ஸ் சசிகுமார் என்ற இளைஞர் பலியானார்.

இச்சம்பவத்தில் மேற்படி இளைஞன் தலை சிதறி அதே இடத்தில் உயிரிழந்தார்.

அரைக்கும் இயந்திரத்தில் பச்சைத் தேயிலையைத் தள்ளிவிடும் போது அவருடைய தலைமயிர் இயந்திரத்தில் சிக்கியதால் இயந்திரத்துக்குள் இழுத்துச் செல்லப்பட்டார் எனக்கூறப்படுகிறது.

அதே பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு யுவதி இச்சம்பவத்தைக் கண்டவுடன் ஓடிச்சென்று மின்சாரத்தைத் துண்டித்துள்ளார்.

அதன் பின்னர் ஏனைய தொழிலாளர்கள் ஓடிச்சென்று இயந்திரத்துக்குள் சிக்கிய இளைஞனை வெளியே இழுத்து எடுத்துள்ளனர். (ஒ)




**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்திய கலைஞர் கௌரவிப்பும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.**

**இந்த விழாவில் மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரும் காததவராஜன சிந்து நடைக்கூத்து கலைஞனுமான இளங்கலைவேந்தன் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸினால் கிரீடம் அணிவித்து, பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (எ)**

## தேவை

மில்வேலைசெய்யத்தெரிந்தவர்கள் உடன் தேவை.
தொடர்பு:
கஜலக்ஸ்மி அரிசி ஆலை,
வட்டுக்கோட்டை. (9703)

## தேவை

கடைக்கணக்குகள் எழுதக்கூடிய அனுபவமும், வியாபார ஆர்வமும் உடைய ஆள் தேவை.
தொடர்புகளுக்கு:
192, கே.கே.எஸ். வீதி,
(9707) யாழ்ப்பாணம்.


## சமய சந்நிதியில்

சாவகச்சேரி,ஒக்.20

கல்வயல் விளைவேலி ஐயனார் ஆலய பிராயச்சித்த கும்பாபிஷேகம் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தி.கிருஷ்ண மூர்த்திக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஐ-31)

# கட்டாக்காலி நாய்களினால் கற்கோவளத்தில் தொல்லை

படையினரின் காவலரண்களை அண்டியுள்ள பகுதிகளில் நடமாடும் கட்டாக்காலி நாய்களினால் கற்கோவளம் பகுதி மக்கள் ஆடு, கோழி முதலிய கால்நடைகளை வளர்க்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கட்டாக்காலி நாய்கள் குடிமனைகளுக்குள் புகுந்து கோழிகள், கோழிக் குஞ்சுகள், ஆடுகளைக் கடித்துக் குதறுகின்றன. இத்தகைய சம்பவங்கள் பல தடவைகள் நடைபெற்றுள்ளதால் குடியிருப்பாளர்கள் ஆடு, கோழிகள் வளர்ப்பதைக் கைவிட்டு வருகின்றனர்.

இதுதொடர்பாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திடம் குடியிருப்பாளர்கள் முறைப்பாடு செய்ததை அடுத்து சமாசத்தின் செயலாளர் எஸ். சூரியகுமாரன் அப்பகுதியில் உள்ள காவலரண்களில் உள்ள படையினரிடம் முறையிட்டபோது தாங்கள் நாய்களை வளர்ப்பதில்லை. அவை குடியிருப்பாளர்களுடையதே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து கற்கோவளம் பகுதியில் திரியும் கட்டாக்காலி நாய்களை ஒழித்து இப்பகுதி மக்கள் ஆடு, கோழிகளை வளர்க்க உறுதுணை புரியுமாறு சமாசச் செயலாளர் பருத்தித்துறை நகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-173)

## சுவரொட்டி போட்டி

தென்மராட்சி அரிமாக் கழகம், சாவகச்சேரி கல்வி வலயத்துடன் இணைந்து நடத்தும் 11,12,13, வயதினருக்குட்பட்ட மாணவர்களுக்கான சமாதானச் சுவரொட்டிப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளதாக அரிமாக்கழகத் தலைவர் செ.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (ஐ-31)




# Dialog GSM

The future today



| | புதிய விலை | பழைய விலை |
|---|---|---|
| ALCATEL | 12425 | 12950 |
| SAGEM | 11950 | 12950 |

அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகஸ்தர்கள்

# DIAL LINKS



## THE PHONE SHOP

இல. 204, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி : இல. 077 - 7736469

### கவர்ச்சிகரமான பல சலுகைகள்

- ★ இரண்டு வருட உத்தரவாதம்.
- ★ கைக்கடக்கமான புதிய வடிவங்களில் தொலைபேசி.
- ★ உள்வரும் அழைப்புக்கள் அனைத்திற்கும் ஒரு நிமிடம் இலவசம்.
- ★ கையில் எடுக்காமல் ஸ்பீக்கர் மூலம் பேசும் கருவி அத்துடன் 250 இலக்கங்களை பெயர்களுடன் உள்ளடக்கும் தன்னியக்க மீள் தொடர்பு.
- ★ குறுந்தகவல் சேவை (SMS) மற்றும் சர்வதேச நேரடி அழைப்புக்கள் (IDD) வெளிநாட்டு அழைப்புக்கள்
- ★ எமது அலைவரிசை விஸ்தரிப்பு சேவையின் முதற்படியாக சாவகச்சேரியில் ஒரு தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கப்பட்டு வருகின்றது.
- ★ இன்னும் அலைவரிசை குறைவான இடங்களிற்கான எமது அலைவரிசை விரிவாக்கத்திற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.
- ★ உள்வரும் அழைப்புக்களின் இலக்கங்களை அறிவதற்கான CLI வசதிகள்.
- ★ இன்னும் சில வாரங்களுக்கு மட்டுமே இச்சலுகை விலை.

விரையுங்கள் எமது காட்சியறைக்கு!

வேறு இடங்களில் வாங்கும் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்படும். (9708)



## யாழ்நகரில் தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகை
## புத்தம் புதிய Canon Photo Copier இயந்திரம்

167000+VAT+TAX விலையில்



எமது விலை 167000 - 40000 +VAT+TAX

Canon NP 7161

உங்களின் பழைய, இயங்காத போட்டோக் கொப்பி இயந்திரங்களை உச்சவிலையாக ரூபா 40,000இற்கு கொள்வனவு செய்வதுடன், அதனை எமது Canon NP 7161 போட்டோக் கொப்பி இயந்திரங்களின் விலையில் கழித்து மிகுதிப் பெறுமதிக்கு மாத்திரம் VAT, TAX என்பவற்றுடன் விற்பனை செய்ய முன்வந்துள்ளோம் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

NP 1215 Canon Photo Copier 155000 VAT+TAX உட்பட விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: நவகலா
மெட்ரோ பொலிட்டன் விற்பனை முகவர்
200, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P.: 021- 2222543. (C/24307)


## R.B. BOOKING CENTRE

இன்றுமுதல் எமது ஸ்தாபனத்தில் கடமையாற்றிய திரு.விஜய பாஸ்கர் (பெரியதம்பி) அவர்கள் 20.10.2002 இல் இருந்து விலகியுள்ளார். இதனால், இவருடனான எமது நிறுவனம் சார்ந்த கொடுக்கல் வாங்கல்களுக்கு இன்றிலிருந்து நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகி
(C/24350) R.B. புக்கிங் சென்ரர்

## பயணிகள் தங்கும் விடுதிகள் சங்க அறிவித்தல்

மேற்படி விடுதிகளை நடத்துபவர்கள் சங்கத்தின் கீழ்வரும் முகவரியில் விடுதிகளை பதிவு செய்வதற்கென உள்ள படிவத்தைப் பூர்த்திசெய்து எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் (25.10.2002) சங்கத்தில் சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்ளும்படியும் இத்திகதியின் பின் எவ்வித பதிவும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*392, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.* (9705) செயலாளர் ப.த.வி.சங்கம்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அனா சிரோன்மணி இராசரட்ணம்

(இளைப்பாறிய ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிரோன்மணி இராசரட்ணம் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெனி இராசரட்ணத்தின் மனைவியும் தயாளினி, விமலினி ஆகியோரின் அருமைத் தாயாரும் இரட்ணராஜா, கீரன் ஆகியோரின் மாமியாரும் பென், டங்கன்,அனா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான திருமதி நவமணி மில்ஸ், பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம், லூதர் துரைசிங்கம், லூதர் இராஜரட்ணம், டாக்டர் லூதர் குணரட்ணம், லூதர் செல்வராஜா மற்றும் திருமதி ரோசமலர் பாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (21.10.2002) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50/2, PERERA AVE.,*
*KALUBOVILA.*
*Phone: 821206* (9704)

தகவல்:
சுஜனி ராஜதேவன்
(மருமகள்).

## திருமதி ஐயாத்துரை மகேஸ்வரி

ஆக் வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வேப்பங்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை மகேஸ்வரி 18.10.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியின் அன்புப் புத்திரியும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - செல்லம்மா தம்பதியினரின் மருமகளும் ஐயாத்துரையின்(கட்டட ஒப்பந்தகாரர்) அன்பு மனைவியும் உதயகர்ணன்(கட்டார்), உதயராஜா(பிரான்ஸ்), உதயராணி (பிரான்ஸ்), உதயகலா(இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக விரிவுரையாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் குகநந்தனின் (பிரான்ஸ்) அன்பு மாமியும் கததிஷணாவின்(பிரான்ஸ்) அன்புப் பேர்த்தியும் ராணி, இராசையா, பாக்கியம், குருசாமி, துரைச்சாமி, தவமணி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளைமறுதினம்(22.10.2002) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

*இல.95/34, சூசையப்பர் கோவிலடி,*
*முதலாம் ஒழுங்கை,*
*வேப்பங்குளம், வவுனியா.* (9709)

தகவல்:
ஐ.உதயகர்ணன் (மகன்)
(கண்ணன்)

## வைரவன் (கொழும்பார்) நாகம்மா

மட்டுவில் தெற்கு, கண்ணன் ஆலயவீதியைச் சேர்ந்த வைரவன் நாகம்மா 16.10.2002இல் இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவன் அவர்களின் அன்பு மனைவியும் மனோகரன் (டென்மார்க்), மகேந்திரன் (தேவன் - சுவிஸ்), மனோரஞ்சினி (மட்டுவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சதாசிவம் (சுவிஸ்), தங்கமணி (டென்மார்க்), பரிமளா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அஜன், காலஞ்சென்ற அருண் மற்றும் அகிலா, அகிலன், திவ்வியா, ரக்ஷண்யா, லாவண்யா, ஆர்த்திகன், ஆர்த்திகா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.10.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு சின்னத்தா மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்ணன் ஆலய வீதி,*
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* (9710)

தகவல்:
ஜெயக்கொடி,
(அரச முதியோர் இல்லம், கைதடி)

## குண்டு வெடிப்புகள் தொடர்பாக
# இஸ்லாமிய மதகுரு ஒருவர் இந்தோனேசியாவில் கைது!

ஜகார்த்தா,ஒக்.20

இந்தோனேசியாவில் இடம்பெற்ற பல்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக அபூபகர் பஸீர் என்ற அடிப்படைவாத இஸ்லாமிய மதகுருவை இந்தோனேசியப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

'சோலோ' நகர மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் -

அவரது உடல்நலம் சீராகும்வரை தொடர்ந்து மருத்துவமனையில் அவர் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார் என்றும் -

பொலீஸார் தெரிவித்தனர்.

2000ஆம் ஆண்டில் கிறிஸ்தவத் தேவாலயங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்தப்பட்டதாகவும் -

விசாரணையைத் தொடர்ந்து அவரது உடல்நிலை மோசமடைந்துள்ளதாகவும் - கூறப்படுகிறது.

மேற்குலகத்தினரை இலக்குவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் இந்தோனேசியாவில் அதிகரித்து வருவது குறித்து ஆஸ்திரேலியா எச்சரித்



துள்ளதையடுத்தே இந்தோனேசிய அரசு பஸீரைக் கைது செய்ய முன்வந்ததாக நம்பப்படுகிறது.

இந்தோனேசியாவின் தலைமறைவு இயக்கமான ஜாமா இஸ்லாமியாவை பஸீர வழிநடத்தியதாக இந்தோனேசிய அரசு நம்புகிறது.

சர்வதேசத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்புடன் ஜாமா இஸ்லாமியா தொடர்புகளை வைத்திருந்ததாகவும் -

வெள்ளிக்கிழமைத் தொழுகைகளின் போது பின்லேடன் நலமுடன் வாழவேண்டி பஸீர் விசேட பிரார்த்தனைகளை நடத்தியதாகவும் -

கூறப்படுகிறது.

இது ஒரு புறமிருக்க இந்தோனேசியாவில் தொடர்ந்து மேற்குலக குடிமக்கள் மற்றும் நிலைகளைக் குறிவைத்து தாக்குதல்கள் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டு வருவதாக ஆஸ்திரேலிய புலனாய்வுத் துறை எச்சரித்துள்ளது. (ஒ)

# அமெரிக்காவின் முயற்சிக்கு இந்தியா கடும் எதிர்ப்பு!

நியூயோர்க்,ஒக்.20

ஈராக் மீதான அமெரிக்கா தன்னிச்சையாகத் தாக்குதல் நடத்த முயற்சிப்பதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல் பேரழிவையும் நினைக்க முடியாத அளவுக்கு விளைவுகளையும் ஏற்படுத்துமென ஐநா.வில் நடந்த ஒரு கருத்தரங்கில் பேசிய அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் வி. கே.நம்பியார் கூறினார்.

ஈராக் மீது ராணுவ நடவடிக்கையைத் தவிர்த்து மாற்று வழிமுறைகளைக் கண்டறியவேண்டும் எனவும் அவர் கூறினார். (ஒ)

# தென்னாபிரிக்க நகரில் இந்தியப் பெண்கள் கொலை!

டர்பன்,ஒக்.20

தென்னாபிரிக்காவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மூன்று பெண்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இச்சம்பவங்கள் தெற்கு டர்பன் நகரில் நடந்ததாகப் பொலீஸார் கூறினர்.

இஷிபினோ என்ற கிராமத்தில் கரும்புத் தோட்டத்தில் சம்பவதினத்தன்று இரவு திடீரென்று துப்பாக்கிச் சத்தம் கேட்டதாகவும் -

உடனே, கிடைத்த தகவலை அடுத்து பொலீஸார் அங்கு சென்று பார்த்தபோது, 3 பெண்களும் இறந்து கிடந்ததாகவும் - பொலீஸார் தெரிவித்தனர்.

தென்னாபிரிக்காவில் கடந்த சில மாதங்களாக இந்திய வம்சாவளியினர் இனவாதிகளால் கொல்லப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஒ)

### நேபாளப் பிரதமர் தீவிரவாதிகளுக்கு அழைப்பு

காத்மண்டு,ஒக்.20

நேபாளத்தின் புதிய பிரதமர் லோகேந்திர பஹதூர்சந் நாட்டில் அமைதியை ஏற்படுத்த ஒத்துழைக்கும்படி மாவோயிஸ கிளர்ச்சியாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பதவியேற்ற பின்னர் முதற்தடவையாக செய்தியாளர்களிடம் உரையாற்றியபோதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

நாட்டில் அமைதி ஏற்பட்ட பின்னர் தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ)

# முரசொலி மாறனுக்கு ரூ.10லட்சம் ஊசிமருந்து

சென்னை,ஒக்.20

இந்திய மத்திய தொழில்துறை அமைச்சர் முரசொலி மாறனின் நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த ரூ.10 லட்சம் மதிப்புள்ள நவீன ஊசி மருந்துச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த நான்கு நாள் நவீன ஊசி மருந்துச் சிகிச்சை முறைக்குப் பிறகு அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு; உடல் முழுவதும் பரவியுள்ள கிருமித் தொற்றை 'ஸிக்ரிஸ்' என்ற நவீன ஊசி மருந்து கட்டுப்படுத்தும் நிலையில் நுரையீரல், சிறுநீரகம், கல்லீரலின் செயற்பாடுகள் மேம்படும் என்று மருத்துவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

இதய வால்வில் கிருமித் தொற்று ஏற்பட்டதையடுத்து கடந்த மாதம் மாறன் சென்னை அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கிருமித் தொற்றால் பாதிக்கப்பட்ட இதய வால்வு அகற்றப்பட்டு புதிய வால்வு பொருத்தப்பட்டது. எனினும் கிருமித் தொற்றுப் பிரச்சினை அதிகமாகி அவரது உடல்நிலை மோசமானது. இதையடுத்து வெளிநாட்டு மருத்துவர்களின் ஆலோசனைப்படி உடல் முழுவதும் பரவியுள்ள தீவிர கிருமித் தொற்றைக் கட்டுப்படுத்த அமெரிக்க எ.'ப்.டி.ஏ.அமைப்பு அண்மையில் அங்கீகரித்துள்ள 'ஸிகரிஸ்' என்ற நவீன ஊசிமருந்து அவருக்குத் தொடர்ந்து செலுத்தப்பட்டுவருகிறது. (ஒ)

# சிறுவர்களை அடிக்கலாமா? கனடா நீதிமன்றில் வழக்கு!

ஒட்டாவா,ஒக்.20

கனடாவில் சிறுவர்களை பெற்றோர்களும், ஆசிரியர்களும் அடிக்கக் கூடாது என்று சிறுவர் உரிமைக் குழுவும், அவர்களை நல்வழிபபடுத்துவதற்காக அடிக்கலாம் என்று பெற்றோர் ஆசிரியர் சங்கமும் வாதிட்டு வருகின்றன.

சிறுவருக்கான கனடா கூட்டமைப்பு, சிறுவர்களை பெற்றோர் அடிப்பதற்கு உரிமை இல்லை என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

கனடா நாட்டின் குற்றத் தடுப்புச் சட்டம் 43ஆவது பிரிவு பெற்றோர் - ஆசிரியர் ஆகியோர் குழந்தைகளைத் திருத்துவதற்காகப் பலப்பிரயோகம் செய்யலாம் என்று அனுமதி அளிக்கிறது. எது நியாயமானதோ அதைத் தாண்டி பலப்பிரயோகம் போய்விடக்கூடாது என்றும் சட்டம் சொல்கிறது.

ஒருவர் இன்னொருவரைத் தாக்கினால் அது குற்றவியல் குற்றம் ஆகும். அது போல சிறுவர்களை அடிப்பதும் குற்றம்தான் என்று சிறுவருக்கான கனடா கூட்டமைப்பின் சட்டத்தரணி செரில் மில்னே கூறினார்.

சரி எது, தவறு எது என்பதைப் புரிந்து கொள்வதற்காக சிறுவர்களை அடித்து நல்வழிப்படுத்துவது குற்றமாகாது என்று ஆசிரியர் கூட்டமைப்பின் சட்டத்தரணி கிபென்லான டோல்ட் பதிலடி கொடுத்துள்ளார்.

# தாய்லாந்து எம்.பிக்கள் 'ஜீன்ஸ்' அணிய அனுமதி

பாங்கொக்,ஒக்.20

தாய்லாந்தில் நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள், அவைக்கு வரும் போது, காற்சட்டை (ஜீன்ஸ்) அணிந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பெண் உறுப்பினர்கள், பாரம்பரிய உடையான பாவாடை அணியும் வழக்கம் இப்போது உள்ளது. தங்கள் வசதிக்காக, காற்சட்டை அணிய விரும்பினால் அவர்கள் அதனை அணியலாம் என்று தற்போது தாய்லாந்து அரசு அறிவித்துள்ளது.

500 உறுப்பினர்கள் கொண்ட தாய்லாந்து நாடாளுமன்றத்தில் 46 பெண் உறுப்பினர்கள் உள்ளனர். அரசின் புதிய அறிவிப்பை அவர்கள் விவாதித்தனர். பாரம்பரிய உடையைத் தொடர்ந்து அணிவது என்றும், காற்சட்டை அணிய விரும்பும் பெண்கள் அவ்வாறு அணிந்து கொள்ளலாம் என்றும் அவர்கள் முடிவு செய்தனர்.




கோண்டாவில் கிழக்கு அருள்மிகு

**சபரிச ஐயப்பன் தேவஸ்தானம் மண்டலாபிஷேக பூர்த்தி விழாவிஞ்ஞாபனம்**

நாளை (21.10.2002) 41ஆம் நாள் திங்கட்கிழமை

காலை 9.00 மணிக்கு - 1008 சங்காபிஷேகம்

நண்பகல் 12.00 மணிக்கு - அன்னதானம்.

மாலை 4.00 மணிக்கு - சுவாமி வீதியுலா, படிபூசை, பஜனை என்பன இடம்பெறும்.

குறிப்பு :- விஷேட நிகழ்ச்சி

மாலை 6.00 மணிக்கு - "கற்பகன்" வில்லிசை குழுவினரின் (சித்தன்கேணி) ஐயப்பன் பெருமை பொருள் பற்றி நடைபெறும்.

**அனைவரும் வருக! ஐயப்பன் அருள் பெறுக!!**

இங்ஙனம்,
உபயகாரர்கள்

(9711)




**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 43 வயதான விவாகரத்து பெற்ற அரச உத்தியோகத்தரும் சொந்த நிறுவன உரிமையாளருமாகிய மணமகன் தனக்கு ஏற்ற பெண்ணை தேடுகிறார். விரும்பியோர் முதல் கடிதத்திலேயே சாதகம் உட்பட சகல விவரங்களையும் அனுப்பி உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு:-
வி.இ.1678,
மே/பா.உதயன்
யாழ்ப்பாணம். (9706)





**விவாக சோபன மாங்கல்ய தாரண சுப முகூர்த்த அழைப்பு**

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சித்ரபானு வருஷம் ஐப்பசி மாதம் 3ஆம் நாள்
இன்று (20.10.2002) ஞாயிற்றுக்கிழமை ரேவதி நக்ஷத்திரமும் அமிர்தயோகமும்
தனு லக்கினமும் கூடிய பகல் 11.02. முதல் 12.02 வரையுள்ள சுப முகூர்த்தத்தில்

| | |
|---|---|
| ஊரெழு, பிரம்மஸ்ரீ சிவஞானஐயர் (சாஸ்திரியார்) அவர்களதும் மீசாலை, பிரம்மஸ்ரீ வெங்கடாசல ஐயர் அவர்களதும் பௌத்திரனும் எமது சிரேஷ்ட புத்திரனுமான | கண்டி, சிவஸ்ரீ பால நாகேந்திரக் குருக்கள் தம்பதியினரதும் சங்கானை சிவஸ்ரீ சிவ.நாகேஸ்வரக்குருக்கள் தம்பதியினரதும் பௌத்திரியும் எமது ஜேஷ்ட புத்திரியுமான |
| சிரஞ்சீவி பிரம்மஸ்ரீ மங்களேஸ்வரசர்மாவிற்கு | சௌபாக்கியவதி சாந்தஸ்வரூபியை |

கன்னியாதான மாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால்
அத்தருணம் தாங்கள் தங்கள் பந்து மித்ர சமேதரராக வருகை தந்து மணமக்களை
ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(மணமகள் இல்லம்) கந்தர்மடம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம் திருமணம்.
சமாவர்த்தனம் காலை 7.56 முதல் 9.06 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.
அரியாலை, வதுவர கிரகப் பிரவேசம் மாலை 4 மணிக்கு (மணமகன் இல்லம்)

| | |
|---|---|
| ஸ்ரீமதி - பவளமல்லிகா சிவசாமிசர்மா குடும்பத்தினர் | சிவஸ்ரீ நாகேந்திர பாலசுப்ரமணியக் குருக்கள் கௌரீஸ்வரி குடும்பத்தினர் |
| *பிரப்பம் குளம் மாரியம்மன் கோயிலடி, மாம்பழம் சந்தி, அரியாலை.* | *48, 2ம் ஒழுங்கை பிறவுண் வீதி, கந்தர்மடம்.* |

*இரு வீட்டார் அழைப்பு*

(9702)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவசம்பு தங்கரெத்தினம்

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 50, உக்குளாங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசம்பு தங்கரெத்தினம் 18.10.2002 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொ.சிவசம்புவின் அன்பு மனைவியும் புஸ்பராணி (வவுனியா), இந்திராணி(டெய்சி, யா.மா.சபை குடும்பநல சேவையாளர்), ஜெயராணி(கனடா), பன்னீர்ச்செல்வம்(கனடா), விஜயகுமார்(கனடா), ரஞ்சிதமலர்(வவுனியா), விஜயகுமாரி(வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் நவரட்ணசிங்கம்(சந்திரன் வெல்டிங், யாழ்ப்பாணம்), கோபாலசிங்கம்(கனடா), வசந்தமலர்(கனடா), சூரியகலா (கனடா), அருணாசலம்(வவுனியா) ஆகியோரின் மாமியாரும் புஸ்பராசா (கிளிநொச்சி), தங்கராணி(வவுனியா), யோகராசா(வவுனியா) யோகராணி (வவுனியா), பத்மஸ்ரீ(யாழ்.), சுமதி(வவுனியா), செல்வி(யாழ்.), ஜீவன்(கனடா), விபூசிகா(யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அனுரா (வவுனியா), அனந்தன்(கனடா), சுகந்தன்(கனடா), ஜெயந்தன்(கனடா), மீரா(கனடா), சந்திரிகா(கனடா), யுவராஜ்(கனடா), தேனுஜா, ரேனுகா, யசிகரன்(வவுனியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 50, உக்குளாங்குளம், வவுனியாவில் நாளை (21.10.2002) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் மாலை 2மணிக்கு தட்சணாங்குளம் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*50, உக்குளாங்குளம், வவுனியா.* (9712)
திருமதி இந்திராணி நவரட்ணசிங்கம் (மகள்)

### நாகராசா சண்முகராசா

கொக்குவிலை பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா சண்முகராசா நேற்று (19.10.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா - ராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் யோகராணி(ஜேர்மனி), தனபாலசிங்கம் (கொழும்பு), மனோராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
*2ஆம் ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (9713)
உதயகுமார் மனோராணி (சகோதரி)

# நாடக அரங்கேற்றம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

கந்தையா ஸ்ரீகந்தவேள் நெறியாள்கையில் உருவாகிய 'தேரார் வீதியில்' என்ற நாடகம் நாளை திங்கட்கிழமை பிறபகல் 2.30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த நாடகம் நாடக அரங்கக் கல்லூரியால் நடத்தப்படுகின்ற நாடகத் தயாரிப்புக்கான சான்றிதழ் கற்கை நெறிப் பரீட்சைக்காக கந்தையா ஸ்ரீ கந்தவேளினால் எழுத்துருவாக்கம், நெறியாள்கை மூலம் தயாரிக்கப்பட்டதாகும்.

(ஜ-5)

# தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தினார்கள் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்தப் போராட்டங்களிலே ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் என்னை வெகுவாகக் கவர்ந்தது.

இராணுவக் காவலரண்கள் கட்டுப்பாடுகளுக்குள் இருந்துகொண்டே நீங்கள் இப்படியானதொரு நிகழ்வை நடத்துகின்றீர்கள். நாமும் தமிழகத்திலிருந்து இங்கு வந்து இவற்றில் கலந்துகொள்கின்றோம்; உரை நிகழ்த்துகின்றோம்.

ஆனால், இராணுவமுகாம்கள் அற்ற - ஜனநாயக சூழல் நிலவும் நாடு என்று சொல்லப்படுகின்ற தமிழகத்திலே நாம் இவ்வாறு பேச முடியாது. அங்கு தடா சட்டம், பொடா சட்டம் என்று பல்வேறு சட்டங்களைப் போட்டு வைத்திருக்கிறார்கள்.

சிறிய - வலிமை குறைந்த இனமாகிய நீங்கள் வலிமை கூடிய சக்திகளுடன் போராடினீர்கள். அவர்கள் உங்களின் கட்டடங்களைத் தகர்த்திருக்கலாம்; உங்களை சல்லடை போட்டிருக்கலாம். ஆனால், உங்களது உறுதியையும் - நம்பிக்கையையும் உணர்வையும் சிதைக்க எவராலும் முடியவில்லை.

இந்திய இராணுவம் இந்த மண்ணிலே இருந்த காலத்தில் தமிழகத்தில் இருந்துகொண்டு அதனை நான் எதிர்த்தேன்.

போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல், அரசியல் என்பது இரத்தம் சிந்தாத போராட்டம். எனவே, இப்பொழுது நடைபெறுவதும போராட்டம்தான் என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

காசி ஆனந்தன் போன்ற பெரும் கவிஞர்கள் இங்கு தோன்றி போராட்டத்துக்கு உரமூட்டும் வகையில் கவிதைகளைப் படைத்தமையும் விடுதலைப் போராட்டத்தின் உச்ச வளர்ச்சிக்கு காரணம் என்று கூறலாம்.

(ம)


அரசடி வீதி, கந்தர்மடம்.

**இணைந்த கணிதம்**

**A/L 2004**

வகையீடு Tue: 5.45 - 6.45

ஆரம்பம் 22. 10. 2002

வரிசைமாற்றம்சேர்மானம்

Sat, Sun 5.45 - 6.45

2002 A/L எடுத்த மாணவர்களுக்கு

**PAPER CLASS**

ஒருதள விகைகள் வகையீட்டின்பிரயோகம் } Sat, Sun 9.30 - 11.30 புதியநேரம்

(9625)

By. செந்தில்நாதன் B.Sc.


# மானுடத்தின் தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமர்வு இடம்பெற்றது. சண்முகம் சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் கவிஞர் சோ. பத்மநாதன், சு.வில்வரெத்தினம், ஆகியோர் ஈழத்துக் கவிதை தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

பிற்பகல் 1.30மணிக்கு ஆரம்பமான 'சிறுகதை' அமர்வுக்கு செம்பியன்செல்வன் தலைமை தாங்கினார். இந்த அமர்வில் தெளிவத்தை ஜோசப தாமரைச் செல்வி, இராஜ தர்மராஜா ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

'குழந்தை இலக்கியம்' என்ற தலைப்பில் - கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற்ற மூன்றாவது அமர்வில் கலாநிதி சபா ஜெயராஜா, செ.யோகநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து தமிழகக் கவிஞர் இன்குலாப் 'தமிழ்த் தேசியமும் தமிழ்க் கவிதையும்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். நிறைவுரையை விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி வழங்கினார்.

நிறைவாக புதுவை அன்பனின் 'கரைதேடும் ஓடங்கள்' நாடகமும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட சிங்களப் பிரமுகர்கள், ஊடகவியலாளர்களுக்கான நிகழ்வின் முக்கிய பகுதிகள் யாவும் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழக மொழியியல்துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் எஸ்.சுவாமிநாதன் நிகழ்வுகளை சிங்களத்தில் மொழிபெயர்த்தார். இந்த நிகழ்வையொட்டி வீரசிங்கம் கட்டடத் தொகுதி மற்றும் அதனை அண்டியுள்ள வீதிகள் யாவும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இந்த நிகழ்வு இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளமை தெரிந்ததே.

(ம-4)

## பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை -

சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இச்சமயத்திலும் பொருளாதார ரீதியில் நாடு நலிவடைந்துள்ள நிலையிலும் இலங்கை ஒரு தேர்தலை எதிர்நோக்குவது நல்லதல்ல என்று மேற்குலக இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(ம-3)

## சமாதானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலணி செயலர் பேர்னாட் குணதிலக ஆகியோரும் அமைச்சருடன் சென்றிருந்தனர்.

அங்குள்ள மக்களுடன் அமைச்சர் கலந்துரையாடி சம்பவத்தின் உண்மைத்தன்மையை அறிந்தார்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சம்பவம் குறித்து அமைச்சருக்கு விளக்கம் அளித்தார்.

அமைச்சர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

நிரந்தர சமாதானத்தை எட்டுவதற்காக அரசு முழு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. இந்த முயற்சியைக் குழப்புவதற்கு பல சக்திகள் முனைந்துள்ளன. இந்தச் சக்திகளே அக்கரைப்பற்றுச் சம்பவத்தின் சூத்திரதாரிகள். இவர்களின் வலையில் சிக்கிவிடாமல் மக்கள் கவனமாகச் செயற்படவேண்டும் - என்றார் அவர்.

(ம-3)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் யுத்தம் காரணமாக வடக்கில் உள்ள காணிகளின் எல்லைகள் தொடர்பாக பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன என்றும் -

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் - அவர் மேலும் சொன்னார்.

நோர்வே நில அளவை அதிகார சபையின் நிபுணர்களின் உதவியை இதற்காகப் பெறவிருப்பதாகவும்-

அவர்களுடன் இணைந்து நில அளவைத்திணைக்கள அதிகாரிகளும் இந்தப் பணியில் ஈடுபடவிருப்பதாகவும் - அவர் கூறினார்.

(ம-3-12)

## அக்கரைப்பற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞன் ஒருவனைக் கடத்தியதன் மூலம் இரு சமூகங்களிடையே முரண்பாடுகளை உருவாக்க சில சக்திகள் முனைந்துள்ளன என்றும்-

இத்தகைய சக்திகளை இனங்கண்டு அவற்றுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - பிரதமர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அக்கரைப்பற்றுக்குச் சென்று நேரடியாக விசாரணைகளை நடத்திய உள்துறை அமைச்சுச் செயலர் ஜூனைட் அறிக்கை ஒன்றை இந்த மாநாட்டில் சமர்ப்பித்தார்.

அதேவேளை -

இந்தச் சம்பவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எந்தவித தொடர்புமில்லை என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதென சமாதானச் செயலணி தெரிவித்துள்ளது.

(ம-3-12)


**IPAS INSTITUTE OF PROFESSIONAL ACCOUNTING STUDIES**

Examination Dates

| | | |
|---|---|---|
| CIMA | Stage - I | May 2003 |
| Chartered | Accountancy Foundation | July 2003 |
| aat | Stage - I | June 2003 |

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. புதிய அனுமதிகள் 31.10.02 வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். கலை, வர்த்தக, விஞ்ஞான, கணிதத்துறை மாணவர்களும் இக் கற்கை நெறிகளை பயிலமுடியும். மேலதிக விவரங்களுக்கு IPAS, 199, பிரதான வீதி, யாழ்ப்பாணம். அலுவலக நேரம் சனி, ஞாயிறு காலை 9.00 - 5.00 மணி வரையும். (C-24309)



**அதிசயக்கண்களினூடாக யாழ்ப்பாணம்**





யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துகொண்டு தொழில்புரியும் வெளிநாட்டுக் கலைஞர்களின் ஓவிய, புகைப்பட, சிற்பக் கண்காட்சி

காலம் : 21.10.2002 தொடக்கம் 31.10.2002 வரை தினமும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை.

இடம் : திருமறைக் கலாமன்றத்திற்குரிய கட்டடம், 11, நக்கர வீதி, யாழ்ப்பாணம்.

*கண்காட்சிப் பொருள்களின் விற்பனையால் சேகரிக்கப்படும் நிதி தர்ம நிலையங்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.*

கலைஞர்கள் விவரம் :
அலிஸ்டர் கேர்க், டொமினிக் சன்சனி (புகைப்படவியலாளர்கள்)
லெனொன் போல், பற்றிக் மொறின் (ஓவியர்கள்)
அன்டி ஸ்மித் (சிற்பவியலாளர்)

(9616)



MITSUI, ATLAS, HINODE, MITSUI, ATLAS, HINODE, MITSUI, ATLAS, HINODE, MITSUI, ATLAS,

வடமாகாண மிற்சுயி, அற்லஸ் சிமெந்து வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

மிற்சுயி (MITSUI), அற்லஸ் (ATLAS) சிமெந்து தயாரிப்பாளர்களான ஜப்பான் டோக்கியோ சிமெந்து நிறுவனத்தின் மற்றுமொரு புதிய தயாரிப்பான

ஹினோடே (HINODE CEMENT)

சிமெந்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

*மேலதிக விபரங்களுக்கு:*

ஜெசிபா ஏஜென்சி

277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P.:021-2222654, 021-2222407

மொத்த விலை 435/=

(C-24335)

MITSUI, ATLAS, HINODE, MITSUI, ATLAS, HINODE, MITSUI, ATLAS, HINODE, MITSUI, ATLAS


## மரண அறிவித்தல்

### கலைஞானகேசரி சூசைப்பிள்ளை றோக்கு

மணற்காடு, குடத்தனையைச் சேர்ந்த கலைஞானகேசரி சூசைப்பிள்ளை றோக்கு நேற்று (19.10.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் றோஸ்மேரிதிரேஸின் அன்புக் கணவரும் அன்ரனிற்றா பிறேமினி, அன்ரனிற்றா யூலியஸ், ஸ்ரான்லிட்டிக்கொனிற்(லண்டன்), கொலின்பெர்னாண்டோ (லண்டன்), சாள்ஸ்ஜெறோம்றாஜ்ச் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தகுமாரின் மாமனாரும் தனுஷன், றெக்ஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.10.2002) திங்கட்கிழமை மணற்காட்டில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

*தற்காலிக முகவரி:*
*சூசையப்பர் கோவிலடி,*
*புலோலி தெற்கு,*
*பருத்தித்துறை.*

தகவல்:
ஆ. சாந்தகுமார் (மருமகன்)
மணற்காடு.

(C/24351)


துணறிந்த கட்டணத்தை அறிமுகப்படுத்திய

SERENDIB விமான சேவை

மாற்றத்தை உணருங்கள்....! கட்டணத்தை சிந்தியுங்கள்....!
உறுதிப்படுத்திய பயணச்சீட்டுக்கள்
விவரத்தை எம்மிடம் கேளுங்கள்.

தொடர்பு : செரண்டிப் மனோ, 13,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(24 மணி) 0777/517019, 0777/801038, 021/222 2007

(C/24215)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்

# கோயிலுக்கு நிதி கொடுப்பதுடன் கல்வி வளர்ச்சிக்கும் உதவவேண்டும்!

துணைவேந்தர் வலியுறுத்து

செம்பியன்பற்று,ஒக்.20

வெளிநாடுகளில் வாழும் எமது தமிழ்மக்கள் கோயில்களுக்குப் பெருமதொகையான பணத்தை அனுப்புகிறார்கள். அதுபோல் எமது எதிர்கால சந்ததியினரின் கல்வி அபிவிருத்திக்கும் உதவ அவர்கள் முன்வரவேண்டும்.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழ் தாத்தா கந்தமுருகேசனார் புலமைப் பரிசிலுக்கான பணத்தை கையளிக்கும் வைபவத்தில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

கந்தமுருகேசனார் புலமைப்பரிசில் தொகையை அதிகரிக்கச் செய்ய வேண்டும். இதுபோன்று எமது எதிர்காலச்சந்ததியினரின் கல்வித்தரத்தை மேம்படுத்த இப்பல்கலைக்கழகம் வழிவகுக்கும். இப்போது வழங்கப்படுகின்ற 440 புலமைப்பரிசில்களில் 415 பரிசில்கள் அரசின் உதவியுடன் வழங்கப்படுகிறது. இங்கு மக்களின் உதவி மிக இன்றியமையாதது. ஆகவே, வசதி படைத்தவர்கள் உதவி செய்யமுன்வரவேண்டும் - என்றார் அவர். (ஒ-ரி)

## இன்ரநஷனல் வேக்கிங்குறூப் பிரதிநிதி யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம்,ஒக்.20

'இன்ரநஷனல் வேக்கிங் குறூப் ஒன் ஸ்ரீலங்கா' என்ற நிறுவனத்தின் பிரதிநிதி பீற்றர் போளிங் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

அன்றையதினம் யாழ்.ஆயர் இல்லத்துக்கு விஜயம் செய்யும் அவர், நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளைச் சந்திப்பதுடன் யாழ்செயலகத்திற்கும் சென்று அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார். (எ-8)

## யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம் ஆகிய துறைகளுக்கு 2003ஆம் ஆண்டு அனுமதி பெறவுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இம்முறை நேர்முகப் பரீட்சையுடன் செய்முறைப் பரீட்சையும் நடைபெறும் என கல்லூரியின் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

முன்னர் நேர்முகப்பரீட்சை மட்டுமே நடைபெற்றுவந்தது என்றும் - இம்முறை செய்முறைப் பரீட்சையும் எதிர்வரும் 27ஆம்,28ஆம்,30ஆம் திகதிகளில் கல்லூரியில் நடைபெறும் எனவும் - அவர் தெரிவித்தார். (ஒ-180)

# இடம்பெயர்ந்து புத்தளத்தில் வசிக்கும் 75 ஆயிரம் பேருக்கு நிவாரணம் இல்லை

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் பகுதியில் வசிக்கும் சுமார் 30 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரம் மக்களுக்கு கடந்த நான்கு மாதகாலமாக உலர் உணவுப் பொருளகள் வழங்கப்படவில்லை.

புத்தளம் தொகுதியிலுள்ள நான்கு பிரதேச செயலக பிரிவுகளான புத்தளம், கற்பிட்டி, வண்ணாத்திவில்லு, முந்தல் ஆகிய பகுதிகளிலேயே இடம்பெயர்ந்தவர்களுள் கணிசமான பகுதியினர் வசிக்கின்றனர்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மீள்குடியேற்றக் கிராமங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் இவர்கள் வசித்துவருகின்றனர்.

அரசினால் வழங்கப்படும் உலர் உணவு நிவாரணத்தையே பெரிதும் நமபி வாழும் இவர்களுக்குக் கடந்த நான்குமாத காலமாக நிவாரணப் பொருள்கள் வழங்கபபடாததன் காரணமாக மிகுந்த நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளனர். இதுபற்றி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியேற்ற அமைச்சின் இணைப்பதிகாரியுமான ரிஷாத் பதியுத்தீன், புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவின் உடனடிக் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

நிவாரணப் பொருள்களை உடனடியாக விநியோகம் செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் வேண்டியுள்ளார். (ஓ)

# முஸ்லிம்களின் நலன்களைப் பேண எம்.பி. பதவிகளைப் பயன்படுத்துக!

## விசேட மாநாட்டில் தீர்மானம்

கொழும்பு,ஒக்.20

முஸ்லிம் சமூகத்தின் அபிலாசைகளை வலியுறுத்துவதற்கு நாடாளுமன்றப் பதவிகளின் பலத்தை பயன்படுத்துவது அவசியம்.

- இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்களின் எதிர்காலம் தொடர்பாக ஆராயும் விசேட மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விசேட மாநாடு நேற்றுமுன்தினம் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

அமைச்சர் நூர்டீன் மஷூர் மற்றும் வடமாகாணத்தைச் சேர்ந்த கல்விமான்கள், புத்திஜீவிகள் பலரும் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இனப்பிரச்சினைத் தீர்வுப் பேச்சின் ஆரம்பக்கட்டத்திலேயே வடக்கு - கிழக்கு மாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் குறித்த விடயங்கள் வலியுறுத்தப்படவேண்டுமென இம்மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நெருக்கடியான கட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்பிக்கள் இரு குழுக்களாகப் பிரிந்து செயற்படுவது ஆரோக்கியமானதொரு செயலல்ல.

இது முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தையே பாதிக்கும் எனவே எமது நாட்டின் இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாணும் இந்த இறுதிச் சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது. இதற்காக முஸ்லிம் காங்கிரஸ் எம்பிக்கள் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் நூர்டீன் மஷூர், ரிஷாத் எம்பி ஆகியோர் மேற்கொள்ள வேண்டுமெனவும் இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# மண்டைதீவு பாடசாலையில் மாணவர்கள் அதிகரிப்பு

## ஆனால் ஆசிரியர் பற்றாக்குறை

மண்டைதீவு,ஒக்.20

இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதைத் தொடர்ந்து மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் மாணவர் தொகை அதிகரித்துள்ளது. இரண்டாம் தவணை இறுதியிலும் மூன்றாந் தவணையிலும் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தப்பாடசாலையில் இதுவரை 82 மாணவர்கள் புதிதாகச் சேர்ந்துள்ளனர். தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான ஐந்து வகுப்புக்களில் இதுவரை ஓர் ஆரம்பக்கல்வி ஆசிரியர் மட்டுமே கற்பித்து வந்தார். தற்பொழுது இந்த ஆரம்ப வகுப்புக்களில் மொத்தம் 65 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். ஐந்து பிரிவுகளில் உள்ள இந்த 65 மாணவரையும் ஓர் ஆசிரியரால் சமாளிக்க இயலாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடைநிலை வகுப்புக்களிலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இந்த வருடத்தில் தரம் 10 வரையான வகுப்புக்களே இருக்கின்றபோதிலும் 4 ஆசிரியர்களும் ஒரு பகுதி நேர ஆசிரியருமே இங்கு கடமையாற்றுகின்றனர். கணிதம், விஞ்ஞானம் ஆகிய இருபாடங்களுக்கும் ஒரு கணித ஆசிரியரே நியமிக்கப்பட்டுள்ளார். இதனால், பகுதி நேர ஆங்கில ஆசிரியர் கணிதம், உடற்கல்வி போன்ற பாடங்களையும் கற்பித்து வருகின்றபோதிலும் சித்திரம், சங்கீதம், சைவ சமயம், தமிழ், விருப்பத்திற்குரிய தமிழ இலக்கியம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இளம் ஆசிரியர்கள் அர்ப்பணிபபுடன் இந்தப் பகுதியில் கடமையாற்ற முன்வருவார்களாயின், இந்தப்பாடசாலைகளது மாணவர்களின் தொடருறு கல்வியில் உள்ள துயர்உறு நிலை நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-ரி)

## இராணுவத்தால் மீளக் கையளிப்பு

வலி.வடக்கு,ஒக்.20

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைச் செயலகக் கட்டடம் இராணுவத்தால் மீளக் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து சங்கத்தின் முதலாம் இலக்கக் கிளைக் கடை தலைமையகக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.(ஒ-86)

# குடாநாட்டை அடையாளப்படுத்தும் 'மெய்யுரு' புகைப்படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலைவட்டம் ஏற்பாடு செய்த 'மெய்யுரு' புகைப்படக் காட்சி கடந்த வியாழனன்று ஆரம்பமாகி இன்று ஞாயிறுவரை பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றது. மேற்படி காட்சி தொடர்பான தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.

உலகிலுள்ள ஒவ்வொரு இனமும் தனக்கான தனியடையாளங்களால் ஆனது. அடையாளத்தைப் பாதுகாத்தல் என்பது தேசிய உருவாக்கத்திலும், வலிமையாக்கத்திலும் பிரதானமான பங்கு வகிக்கின்றது. எங்களைப் போன்ற போர்கள், மரணங்கள், அழிவுகள் மலிந்த ஒரு சமூகத்தின் கலாசாரம் தனக்குரிய அடையாளங்களுடன் பேணப்படுதல் என்பது ஓர் இன்றியமையாத வரலாற்றுக் கடமையாகும். இனத்துவப் பிரதேச கலை அடையாளங்களை இனங்காண்பதும், அவற்றின் வரலாற்று அதிகாரங்களூடாக எமது தனித்துவங்களை நிறுவுவதன் ஊடாகவே எமது பண்பாட்டுச் சிறப்பினை எடுத்துக் காட்டமுடியும்.

ஆனால் ஈழத்தமிழர்களின் வரலாற்று, இன அடையாளங்களாக விளங்குகின்ற அரும்பொருள்கள் போரினால் மட்டுமன்றி வெளி இடங்களுக்கு எடுத்துச்செல்ல, ஏற்றுமதி என்பனமூலம் அழிக்கப்பட்டு வருகின்ற இவ்வேளையில் கடந்த 17ஆம திகதி ஆரம்பமாகி இன்று ஞாயிறுவரை நடைபெறும் நுண்கலைத்துறையினரின் கலைவட்டம் ஏற்பாடு செய்த, அவர்களது 8ஆவது முதுச நிகழ்ச்சியான மெய்யுரு - ஆரம்பகால யாழ்ப்பாணத்தின் புகைப்படக்காட்சி முக்கியமானதாகின்றது.

இக்காட்சியில் யாழ்ப்பாணத்தின் புகைப்படக்கலை வரலாற்றில் மூன்று தலைமுறையாகத் தொடர்ந்து நடத்தப்பெற்ற மூத்த ஸ்ரூடியோவான லோட்டன் ஸ்ரூடியோவினால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தொடக்கம் கிட்டத்தட்ட 1970ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் நடத்தப்பெற்ற ஸ்ரூடியோக்களினால் எடுக்கப்பட்ட படங்கள் வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவை புகைப்படங்களின் காலரீதியாக அன்றி ஆரம்பகால புகைப்பட நிலையங்களின் காலரீதியில் ஆய்வுத் தேடுகையில் கிடைக்கப் பெற்றவற்றின் காட்சியாக இது அமைந்துள்ளது.

இவ்வாறானவற்றில் முதன்மையாக லோட்டன் ஸ்ரூடியோவினதும் அத்துடன் லீல்லி ஸ்ரூடியோ, செல்லம்ஸ் ஸ்ரூடியோ, பேபி ஸ்ரூடியோ, ரகு போட்டோ ரெக்னிக் போன்றவற்றினதும் மெய்யுருக்களும் காணப்படுகின்றன. இங்கே பல தனிப்பட்ட



மெய்யுரு

Portrait

யாழ்ப்பாணத்து ஆரம்பகாலப் புகைப்படங்களின் காட்சி

நபர்களின் படங்கள் காட்டப்பட்டிருப்பினும் அனேகமானவற்றின் காலத்தை தெளிவாக அவற்றுடன் தொடர்புடையவர்களினால்கூட தெரிவிக்க முடியாமையினால் அவை பருமட்டாகவே இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அவற்றின் கால நிர்ணயமோ, புகைப்படங்களில் உள்ளோர் பற்றிய சுயவிவரமோ எமக்கு முக்கியமாயினும், இச்சப் புகைப்படங்களினூடாக அதற்கு மேலான விடயங்கள் பலவற்றை எமக்கவை கோடிகாட்டுகின்றன.

இப்புகைப்படங்கள் மேலைத்தேயப் பண்பாடு யாழ்ப்பாணத்து பாரம்பரிய பண்பாட்டினுள் செல்வாக்குச் செலுத்தியபோது ஏற்பட்ட பண்பாட்டு மாற்றத்தை மிகத் துல்லியமாக எடுத்தியம்புகின்றன. ஆண்கள் பெரும்பாலும் வைதீகரீதியாக மேலைத்தேய ஆடைகளுடனும், பெண்கள் மேற்கத்தேய ஆடையின் தோற்றப்பாட்டினை ஒத்த சேலை முனைப்பு னும் இவற்றில் காணப்படுகின்றனர். இவர்கள் நிற்கின்ற இருக்கின்ற முறைகளும், பிற அங்க முறைகளும் மேற்கத்தேய ஓவியங்களை ஞாபகப்படுத்துகின்றன.

இவற்றினைவிட தற்போது மிகப் பரவலாகப் பேசப்பட்டு வரும் பிரச்சினைகளில் ஒன்றான எமது சுயம், தனித்துவ அடையாளங்கள் பற்றிய அறிவுக்கும், உரையாடலுக்கும் இது தக்க சான்று எனக்கூறமுடியும். ஏனெனில் தனித்துவ அடையாளங்களாகக் காணப்படும் அரும்பொருள்கள் பல இங்கு காட்டப்பட்டுள்ளன. உதாரணமாக தளபாடங்கள், திரைச்சேலைகள், தரைவிரிப்புகள், துணிவகைகள், காலணிகள், ஆபரணங்கள் போன்றன நுண்ணிய இருள் ஒளி வேறுபாட்டுத் தன்மையுடன் அப்பொருள்களின் தன்மை(tecture) புலப்படும் வகையில் பதியப்பட்டுள்ளமை மிகமுக்கியமான விடயமாகும்.

இதனைவிட ஒரு படத்திலேயே ஒரு தலைமுறையிலிருந்து மற்றைய தலைமுறைக்கு ஏற்பட்ட பண்பாட்டு மாற்றத்தினால் ஆடை ஆபரண வித்தியாசத்தினை அவதானிக்க முடிகிறது. ரவுக்கை அணியாத ஆரம்பகால பெண்மணிகளும், பின்னர் மேலைத்தேய கலப்பினால் பண்பாட்டு

சோ.குமுதா

ஆடை ஆபரணங்களுடன் காலில் சப்பாத்து அணிந்த பெண்மணிகளையும் காண்பதன் ஊடாக அக்கால நடை உடை பாவனையையும், வழக்கத்தினையும் அறிவதுடன், அவர்கள் எப்படி புகைப்படங்களை நோக்கினர் என்பதையும், அதற்கு எப்படி தம்மை நிலைப்படுத்தினர், அதன்மூலம் அவர்களின் உணர்வுநிலை என்ன என்பதையும் காணமுடிகிறது. இவற்றின்மூலம் அக்காலத்துப் பண்பாட்டுச் செழுமை மிக்க மக்களை எம்மால கண்டுணர முடிகிறது.

இவ்வாறான பண்புகளுடன் யாழ்ப்பாணத்தின் அக்கால ஆண், பெண் இருபாலாரின் நிலைமையினையும், அதில் பெண்களின் பங்கினையும், மக்களின் அந்தஸ்து வேறுபாட்டினையும் ஊகித்தறியமுடிகிறது.

எவ்வாறாயினும், இது யாழ்ப்பாணத்து ஆரம்பகால அனைத்துப் புகைப்படங்களினதும் சாட்சி அல்ல எனினும் இங்குள்ளவை அக்காலக் கலை, கலாசார நடவடிக்கையை மிகத் தெட்டத்தெளிவாக எடுத்தியம்புகின்றன. இதுவொரு முடிந்தமுடிவல்ல. இது குறைந்தபட்ச ஆரம்பமே. இவை எம்மை ஒத்த இக்காலத் தலைமுறையினருக்கு கற்றோ, கேட்டோ அறிந்த விடயங்களினைத் தெளிவுபடுத்தும் வரலாற்றுச் சின்னங்களைச் சுட்டுகின்ற அருங்காட்சி எனலாம். ▲

# விஞ்ஞானப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தினால் விவசாயபீட பழைய மாணவர்களான அமரர்கள் ஜி.கிருபாகரன், ரி.ஜெயக்குமார் நினைவாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட விஞ்ஞான பொது அறிவுப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு விவசாய பீட பிரதான விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில், வாய்மொழிப் பரீட்சையில் வெற்றி பெற்ற பாடசாலைகள் விவரம் வருமாறு:-

▲ முதலாம் இடம்:- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

▲ இரண்டாம் இடம்:- யா/சென் ஜோன்ஸ் கல்லூரி.

எழுத்துப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள் பெயர் விவரம் வருமாறு:-

முதலாம் இடம்:- சி.பகீரதன், சி.காண்டீபன்(பரு.ஹாட்லிக் கல்லூரி).

மூன்றாம் இடம்:- இ.கீர்த்தனா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), நா.சிவகரன்(புனித பரியோவான் கல்லூரி), வி.தனுசன்(புனித பரியோவான கல்லூரி).

ஐந்தாம் இடம்:- சி.கஜேந்திரன் (ஹாட்லிக் கல்லூரி), ச.கண்ணன் (புனித பரியோவான் கல்லூரி), வி.தனுஷன் (புனித பரியோவான் கல்லூரி),

எட்டாம் இடம்:- ல.கேதாரசர்மா (யா/இந்துக் கல்லூரி)

ஒன்பதாம் இடம்: சி.குமரேசன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)

பத்தாம் இடம்: அ.நிஷாந்தன் (யா/இந்துக் கல்லூரி). (ஒ-5)

# 54 வயதில் ஏற்பட்ட வெறிக்கு 69இல் தூக்குத் தண்டனை!

54 வயதுடைய பாடசாலை ஆசிரியர் ஒருவர், அந்த வயதிலும் வெறிபிடித்து, 17 வயதுடைய பாடசாலை மாணவியொருத்தியுடன் பாலியல் வல்லுறவு கொண்டார். அது முடிந்ததும் மாணவியின் கழுத்தை நெரித்து அவளைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் மாத்தறை மேல்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது. விசாரணை முடிவில் மாத்தறை மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ எதிரிக்கு மரண தண்டனை விதித்தார்.

தற்போது 69 வயதை அடைந்துள்ள தித்தெனி பொதுமகா வித்தியாலய முன்னாள் உதவி ஆசிரியரான ஏ.டி.சமரசிங்க என்பவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

1987 செப்ரெம்பர் 11ஆம் திகதியன்று மாவரல பொலீஸ் பகுதிக்குட்பட்ட கலஹகந்த என்ற இடத்தைச் சேர்ந்த எம்.ஆர்.கே. பியவதி (வயது 17) என்ற பாடசாலை மாணவியுடனே இந்த ஆசிரியர் பாலியல் வல்லுறவு கொண்டுவிட்டு அவரின் கழுத்தை நெரித்துக் கொலை செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டிருந் தார்.

எதிரி மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் விசாரணையின்போது நிரூபிக்கப்பட்டன என்று கூறி எதிரிக்கு நீதிபதி மரண தண்டனை விதித்தார்.

# செய்திக் கொத்து

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் இரவு வேளைகளில் நடமாடுவோருக்கு அச்சுறுத்தலாக விருந்த கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன.

வைத்தியசாலைப் பணிப்பாளரின் உத்தரவிற்கமைய, வைத்தியசாலைச் சுகாதாரப்பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையில் சுமார் 25 இற்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பரிசோதகரால் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-15)

## ஆங்கில ஆசிரியருக்கான செயலமர்வு

வலிகாமம் தெற்கு,ஒக்.20

ஆங்கிலப் பேச்சு, ஆங்கில நாடகம், ஆங்கில இசை போன்ற துறைகளின் லண்டன் ஆங்கிலப்பரீட்சை பிரதம பரீட்சகர் பொப் சீஸ்மனால் நடத்தப்படும் ஆங்கில ஆசிரியர்களுக்கான செயலமர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 27 ஆம் திகதி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற உள்ளது.

லண்டன் திருத்துவக் கல்லூரியின் ஆதரவில் உலகளாவிய ரீதியில் ஆங்கில ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காக இது போன்ற செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இச் செயலமர்வில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 10இற்கு மேல் ஆங்கிலம் கற்பிக்கும் சகல ஆங்கிலப் பாட ஆசிரியர்களும் தவறாது கலந்துகொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்செயலமர்வில் கலந்துகொள்ளவுள்ள ஆசிரியர்கள் நாளை மறுதினம் 21ஆம் திகதி வலிகாமம் வலய ஆங்கிலப் பாட பிரிவில் தமது பெயர்களை பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஒ-152)

## நேரக் கணிகாணிப்பாளர் இன்றி பயணிகள் அவதி!

தென்மராட்சி,ஒக்.20

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் வடபிராந்தியப் போக்குவரத்து சபையின் நேரக்கணிப்பாளர் பணியில் ஈடுபடுத்தாததால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து பஸ் சேவைகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றபோதிலும் நேரக் கணிப்பாளர் இதுவரையும் நியமிக்கப்படாததால் பஸ் சேவைகள் பற்றிய நேர விவரங்களை அறிய முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## சமய அறிவு போட்டிகள்

மண்டைதீவு,ஒக்.20

யாழ்மாநகராட்சி மன்றத்தின் சைவ சமய விவகாரக் குழு நடத்தும் சைவ சமய அறிவுப் போட்டி எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இளைய தலைமுறையினரிடையே சமய அறிவு, இறை பக்தி மற்றும் ஆன்மீக உணர்வை வளர்க்கும் வகையில் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. யாழ்மாவட்டப் பாடசாலை மாணவரிடையே இந்தப் போட்டிப் பரீட்சையை எதிர்வரும் பாடசாலை விடுமுறைக் காலத்தில் நடத்த இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-ரி)


**மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது**

மழை காரணமாக பிற்போடப்பட்ட இப்போட்டி குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

சங்குவேலி விவசாயிகள்.
(9700) சங்குவேலி.

**கடை வாடகைக்கு**

இல.172(254), K.K.S. வீதியில் அமைந்துள்ள மாடிக்கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு:
அ.அலெக்ஸிஸ்
இல.18, ... கோயில் கிழக்கு வீதி, யாழ்ப்பாணம்.
(960) T.P. 021-222 3358


## தேவார முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவார முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி முதல் மன்ற தேவாரப் பாடசாலை ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயம் நல்லூரில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும். (ஒ)

## 'நவமலர்' பாடல் நூல் வெளியீடு

மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலையினர் சைவசமய இளைஞர்களினதும் மாணவ சமூகத்தினதும் சமய அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் "நவமலர்" என்ற பாடல் நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளனா. (ஒ-152)

## 'பசுந்தோகை' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தின் 'பசுந்தோகை' சஞ்சிகை வெளியீட்டுவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக விவசாய பீட பிரதான விரிவுரை மண்டபத்தில் விவசாய பீட மாணவர் ஒன்றியத தலைவர் சா.சுதர்சன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி சு.இராசதுரையும் கலந்து கொள்வர். இந்நூலின் வெளியீட்டுரையை விவசாயபீட பீடாதிபதி சு.இராசதுரையும், மதிப்பீட்டுரையை வலிகாமம கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் நிகழ்த்துவர். (ஒ-5)


PRIMA
BEST IN FEED
QUALITY CHICK

இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் பிறிமா வந்துள்ளது

யாழ்ப்பாணம் இல.144, ஸ்ரான்லி வீதியில்

**PRIMA CHICKEN SHOPஇல்**

இருந்து உங்களுக்குத் தேவையான.....

1. PRIMA WHOLE CHICKEN
2. CHICKEN PARTS
3. PRIMA SAUSAGES
4. PRIMA NOODLES
5. PRIMA OIL
6. PRIMA FLOUR
7. PRIMA POULTRY FEEDS

ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*Ceylon Grain Elevators Limited*
*15, Rock House Lane, Colombo - 15.*
*Tel.: 523580, 522556, 524754*
*Telex: 22076 CGE CE Fax:524163*
(சி-24346)



# ஹீரோ மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கான அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் தேவை

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பாரிய அளவிலான, தரத்தில் உயர்ந்த, உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்திவரும் எமது நிறுவனம் முழுமையாக அரசுக்கு சொந்தமான வர்த்தகக் கம்பனியாகும்.

இலங்கையில் ஹீரோ மோட்டார்ஸ்களுக்கான ஒரே விற்பனை முகவர்கள் நாங்கள் என்பதோடு, பரந்த அளவிலான ஹீரோ ஸ்டிரீம், ஹீரோ பவர் ஓட்டோ மோட்டார் சைக்கிள்களைத் தொடர்ந்து வெற்றிகரமாக சந்தைப்படுத்தியும் வருகின்றோம்.

எமது தற்கால நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்காக

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை போன்ற முக்கிய நகர்ப்புற பிரதேசங்களிலிருந்து முதன்மை நிலையிலுள்ள வியாபார நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றோம்.

விண்ணப்பதாரர் போதியளவு களஞ்சியப்படுத்தும் இடவசதி, போக்குவரத்து வசதிகள் மற்றும் பொருத்தமான இட அமைவுகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். ஓட்டோ (Auto) உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தலில் முன் அனுபவம் இவ்வியாபார நடவடிக்கைகளுக்கு மேலதிக தகுதியாகும்.

GENERAL MANAGER/பொது முகாமையாளர்
**STC General Trading Co.Ltd.**
எஸ்.ரீ.சீ. ஜெனரல் ரேடிங் கம்.லிமிட்
(Successors to Sri Lanka State Trading (General) Corporation)
(இலங்கை ஸ்டேட் டிரேடிங் (பொது) கூட்டுத்தாபனத்தின் வழிவந்தது)
(A fully Government owned Company)
(முற்றிலும் அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
100, Nawam Mawatha, Colombo - 2 (P.O. Box: 1686)
100, நவம் மாவத்தை, கொழும்பு - 2 (த.பெ.இல. 1686)
Tel: 432874 Fax: 447970, 436234
தொலைபேசி: 432874 தொலைநகல்: 447970, 436234
E-mail: lankagen@sltnet.lk Web: www.stcgeneral.com
மின்னஞ்சல்: lankagen@sltnet.lk இணையத்தளம்: www.stcgeneral.com

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சின் கீழுள்ள ஒரு நிறுவனம் (சி-24323)

# இடைக்கால நிர்வாகம் முதலில்: அடிப்படை விவகாரம் இறுதியில்!

## புதுமையான சமாதான முயற்சி பற்றி பிரதமர் கருத்து

இலகுவாகத் தீர்க்கக்கூடிய பிரச சினைகளை முதலில் தீர்த்த பின்னர் சிக்கலான பிரச்சினைகளை தீர்ப்பது இலகுவானதாகும்.

சமாதான முயற்சியின் இறுதியில் அரசியல் தீர்வுபற்றிப் பேசும்போது மத்திய அரசின் அதிகாரங்கள் எவை? வலய அலகுகளின் அதிகாரங்கள் எவை? அதிகாரத்தைப் பகிரும் முறை என்ன? நிர்வாக அலகு என்ன? அர சியல் தீர்மானங்களை மேற்கொள்ளும் இறுதி அமைப்பு எது?

இவை குறித்து ஆராயலாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

நீடித்த, நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்திற்கான இறுதி முயற் சியைப் பெரும் நம்பிக்கையுடனேயே அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கூட்டாக முன்னெடுக்கின்றனர். மக் கள் இனமத பேதங்களுக்கப்பால் பாராட்டுகிறார்கள்; பங்களிக்கிறார்கள். பொதுஜன ஐக்கிய முன்னணியின் சமாதான அணுகுமுறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதான இந்த அணுகுமுறை பற்றி பிரதமர் மேலும் விவரித்துள்ளார்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களை இனங்கண்டு அவர்களுக்கு போர்நிறுத்தம்மூலம் அனுகூலங்களை ஏற்படுத்தவே நாம் சமாதான முயற் சியை ஆரம்பித்தோம்.

20 ஆண்டுகளாக போரினால் இன் னல்களை அனுபவிக்கும் மக்கள் இனிமேலும் போரில் சிக்கி கஷ்டப் படுவதை அனுமதிக்கமுடியாது. வடக் கில் ஏற்பட்டிருக்கும் அழிவுகள் யூகோஸ்லாவியாவில் ஏற்பட்ட அழிவு கள் போன்றவை. அதனால் போர் நிறுத்தம்மூலம் மக்களுக்கு நற்பயன் களைப் பெற்றுக்கொடுத்தல்வேண்டும்.

அழிந்த பிரதேசங்களைப் புனர மைக்க வேண்டும். இடம்பெயர்ந் துள்ள மக்களை அவர்களின் பழைய இடங்களுக்குத் திரும்பிச் செல்ல வச திகள் ஏற்படுத்தவேண்டும்.

புதைக்கப்பட்டிருக்கும் 20 லட் சம் கண்ணிவெடிகளை அகற்றவேண் டும். மக்கள் அச்சமின்றி வாழ பாது காப்பை உறுதிசெய்யவேண்டும். குண்டு எந்நேரத்தில் வெடிக்கும் என்று மக்கள் கொண்டிருக்கும் அச்சத் தைப் போக்கவேண்டும்.

இது புதுவிதமான சமாதான முயற்சி. அதிகாரப்பகிர்வு பற்றி இறுதி யில் முடிவுசெய்யலாம். அயர்லாந்தில் போர்நிறுத்தம் செய்த பின் வாழ்க்கை இலகுவானதாக மாறியதால் சமா தான முயற்சி வெற்றிபெற்றது என்று அவர் கூறியிருக்கிறார்.

ஐ.தே.முயின் புதிய, சமதான அணுகுமுறை நடைமுறைச் சாத்தியப் பாடுடையதா?

### மனிதாபிமானம்

நிறையவே மனிதாபிமான கண் ணோட்டத்துடனும் சமூக உளவியற் கண்ணோட்டத்துடனும் முன்னெடுக் கப்படுவதுபோல் தெரிகிறது. விடயத் திற்கு மிகுந்த பக்குவம் காட்டப்படு கிறது. அதேவேளை, அரசியல் நலன் களோடு பின்னிப் பிணைந்ததாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது.

சமாதான பேச்சுக்கள் முடிவடைய மூன்று, நான்கு ஆண்டுகள் பிடிக் கலாம் என்று பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க நியூயோர்க்கில் கருத்துத் தெரிவித்தார்.

அந்தவகையில் பார்த்தால் 2005 இல் வரவிருக்கும் ஜனாதிபதித் தேர் தல் அதனையடுத்துவரும் நாடாளு மன்றத் தேர்தல் என்பன சமாதானப் பேச்சுக்கள் உச்சக்கட்டத்தில் நடை பெறும் வேளையிலேயே நடைபெறும் சாத்தியங்கள் ஏற்படும்.

பேச்சுக்களில் ஏற்படக்கூடிய சாதக நிலைகளும் அனுகூலங்களும் சமா தானத்தைப் புதிய அணுகுமுறையில் முன்னெடுக்கும் துணிச்சல் மிக்க அரசியற் தலைமையையே சாரும்.

19 வருடங்கள் போரின் கொடு மைகளால் வதைபட்ட மக்கள் இன்னு மொரு 19 வருடங்களுக்காவது போர் உருவாகுவதை விரும்பமாட்டார்கள்.

இதனால் ஐ.தே.மு. நீண்டகால ஆட்சி அனுகூலங்களைப் பெறமுடி யும். அதுபோல் உடனடியான அனு கூலங்களையும் பெறமுடியும்.

அதாவது சமாதானப் புறாவாக பறக்கப் பறப்படும் ஐ.தே.முன்னணி அரசின் உறுதிப்பாட்டை உத்தர வாதம் செய்யும் அரசியற் சட்டத்திற் கான 19ஆவது திருத்தச் சட்டமூல மும் எதிரணி வரிசையிலிருந்து 19 எம்.பிக்களின் ஆதரவு பெற்று நிறை வேறும் சாத்தியங்களும் அதிகம ஆகும்.

2001 செப்டெம்பர் 11ஆம் திகதிய ஒஸாமா பின்லேடனின் நியூயோர்க் வாஷிங்டன் மீதான தாக்குதல்களின் பின்னர் ஏற்பட்ட சர்வதேச நிலைமை களே புலிகளை சமாதானத்தை நோக்கித் தள்ளிவிட்டன.

பயங்கரவாதத்தை உலகிலிருந்தே அழித்துவிடுவதில் கண்ணும் கருத்து மாயுள்ள அமெரிக்காவின் நிலைப்பாட் டில் மாற்றமில்லாத நிலை இருக்கிறது.

அத்தகைய காரணங்களால் இனி மேல் விடுதலைப் புலிகள் போருக்கு புறப்படமாட்டார்கள் - மேற்கண்ட வாறு சிலர் கருதும் ஒரு போக்கு இருக்கிறது.

அதுமட்டுமன்றி புலிகள் ஈழக் கோரிக்கையை கைவிட்டு விட்டார் கள். அதனால் இனிமேல் மக்கள் போராட்டங்களையே அவர்கள் நம்பி யிருக்கவேண்டியிருக்கும் என்று சிந் திப்பவர்களும் இருக்கிறார்கள்.

புலிகள் இனிமேல் போர் புரியப் போவதில்லை என்று வேறு பல காரணங்களைக் காட்டுபவர்களும் இருக்கிறார்கள்.

*கலைவாணன்*

எவ்வாறாயினும் ஐ.தே.முவின் புதிய சமாதான அணுகுமுறையின் விளைவாக போரொன்றிற்கான தேவை கள் இல்லாமற் போவது முக்கியமா கக் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

மக்கள் போர் புரிவதற்கு முன் வராத சூழல் ஒன்று உருவாகுமாத லால் போரிற்கான அடிப்படைகள் அற்றுப்போகவும் முடியும்.

### இயல்பு நிலை

பாகுபாடுகள் அகற்றப்படும் நிலை யில் மக்கள் இயல்புநிலையை உண ரத் தொடங்கும்போது தலைமையும் மக்களின் போக்கை அனுசரிக்குமாத லால் இயல்பு வாழக்கைக்கு அதுவே சரியான உத்தரவாதமுமாகும்.

புதிய அரசாங்கத்தின் புதிய அணுகுமுறை புதுத் தென்பை ஊட் டும் அதேவேளை ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருக்கும் கருத் துக்கள் முரண்படுகின்றன.

கோட்பாட்டியல்பு கொண்டதாக வுள்ளன; குழப்பமூட்டுவனவாகவும் உள்ளன.

அரசு - புலிகள் சமாதான நடவடிக் கைகள் விடயத்தில் பொ.ஐ.மு. பின் பற்றும் அரசியல் போக்கு தெரிந்ததே.

முற்றிலும் கட்சிக் கண்ணோட்டத் திலும் பேரினவாத சிந்தனைத் தளத திலும் இருந்து முளைவிடும் சிந்தனை களாகவும் அவை இருக்கின்றன.

ஐ.தே.முவின் அணுகுமுறையைத் தலைகீழாக மாற்றுவதன் அடிப்படை யில் எழுந்தவையாகவும் அவை இருக்கின்றன.

"நாட்டின் ஆட்சிக் கட்டமைப்பு எவ் வாறு அமையப் போகிறது என்பதே முக்கியமான விடயம்.

பிராந்திய சுயாட்சிக்கும் சுயநிர் ணய உரிமைக்கும் அரசாங்கம் என்ன அர்த்தம் கொடுக்கப்போகிறது?

புலிகள் வைத்திருக்கும் இராணு வம், கடற்படை பிராந்திய சுயாட்சி யாவற்றையும் ஒன்றிணைத்தால் தனி நாட்டிற்கு அவசியமான அனைத்தும் அங்கு இருப்பது புரியும்.

இரு தரப்பும் குறிப்பாக எந்த ளவு தூரம் விட்டுக்கொடுக்கத் தயா ராக இருக்கின்றன என்பதைத் தெளிவு படுத்தவேண்டும்.

### துரிதமான செயற்பாடு

அரசாங்கம் துரிதமாக செயற்பட வில்லை. கடுமையான அரசியல் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய முடி வுகளை எடுக்க அரசு அஞ்சுகிறது.

ஆட்சிக் கட்டமைப்பு வடகிழக்கு இணைப்பு, அரசியல் உரிமைகள், ஜனநாயகம், மனித உரிமைகள் போன்ற முக்கிய விடயங்களை அலட்சியம் செய்துவிட்டு புனர்வாழ்வு, புனரமைப்பு, பொருளாதாரம் போன்ற விடயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது.

சமாதானம் வந்துவிட்டது என்ற உணர்வில் மக்கள் இருக்கும் நிலையை அரசாங்கமும் விரும்புகி றது. புலிகளும் இதனையே விரும்பு கின்றனர்." இவ்வாறு ஜனாதிபதியின் செய்திப் பிரிவுக்கு ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் பேட டியளித்துள்ளார்.

இலங்கையரான வடக்கு - கிழக்கு மக்களின் அபிலாஷைகளை நிறை வேற்றுவதற்கேற்ற வாழ்வு ஒன்றை எப்படி அமைத்துக் கொடுக்கலாம்?

19 வருடங்கள் மக்கள் பட்ட வேத னையை எவ்வாறு தீர்க்கலாம் என்பதி லிருந்து தமது சிந்தனையை ஆரம் பிக்காமல் ஐ.தே.முன்னணியின் நட வடிக்கைகளை விமர்சிப்பதிலிருந்தே ஆரம்பிப்பது ஆக்கபூர்வமான அணுகு முறையாக இருக்காது.

ஐ.தே.முன்னணியின் அணுகு முறைகள் ஒவ்வொன்றையும் தலை கீழாக மாற்றிவிட வேண்டும் என்று பொ.ஐ.மு. கூறுகிறது. 1994 தொடக் கம் ஏழு வருடங்களாக அது சமா தானத்தை ஏற்படுத்துவதில் படு தோல்வி கண்டமைக்கு இவ்வாறான அதன் அணுகுமுறைகளே காரண மாகும் என்பதும் புரிகிறது.

அடிப்படை விவகாரங்களை முத லில் பேச வேண்டும் என்று பொ.ஐ. முன்னணியும் சிக்கலான விவகாரங்களை இறுதியில் பேசவேண்டுமென்று ஐ.தே. முன்னணியும் எதிரும் புதிருமான கருத்துக்களை முன்வைத்த படியே யுள்ளன.

இதயபூர்வமாக மக்களை நேசிக் கும் இயல்பு நிலை ஏற்பட்டாலே யுத்த நிறுத்திலிருந்து பூரண விடுதலை கிடைக்கும்.


**பனைமரக்காலை உரிமையாளர்களுடனான**

**கலந்துரையாடல்**

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பனைமரக்காலை உரிமையாளர்களுடனான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 23.10.2002ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதால், அனைத்து பனைமரக்காலை உரிமையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி யாழ்.மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்கின்றது.

யாழ்.மாவட்ட
பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
*யாழ்ப்பாணம்.*
(9701)

**கண்ணீர் அஞ்சலி**

எமது செயலக நிதி உதவியாளர்
திரு.சிறிஜெகநாதன் அவர்களின் பாசமிகு தாயார்
அமரர்
**சிவபாதசுந்தரம் அமிர்தாம்பிகை**
அவர்களது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவ ரது ஆத்மசாந்திக்காக நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.

*வலி.மேற்கு பிரதேச செயலகம்,*
*பிரதேச செயலகம்,*
*சங்கானை.*
(C/24349)
வலி.மேற்கு பிரதேச செயலக
உத்தியோகத்தர்கள்
நலன்புரிச் சங்கம்.

**GUDWIL** தற்பொழுது கிழக்கு மாகாணத்தில்
அட்டாளைச்சேனையில்...

முதல் 55% மட்டும் செலுத்தவும்
மிகுதி 18 மாத
வட்டியில்லா இலகு தவணை
முறையில்

முகவர்கள் தேவை
யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி,
முல்லைத்தீவு,
திருகோணமலை.

நவம்பர் 1 ஆம் திகதி முதல்
உழவு இயந்திரத்தின் விலை
ரூபா 25,000 ஆல் அதிகரிக்கின்றது.



அட்டாளைச்சேனை காரியாலயம்:
S.Y.SEYED AHMED MOWLANA
**GUDWIL**
FIRST DIVISION, ATTALACHENAI.
TEL NO: 067 77366,
072 982742

## திருமண வாழ்த்து

கோப்பாய் லயன்ஸ் கழக முன்னாள் தலைவரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவின் உபதலைவருமாகிய

**லயன் K.செல்வரட்ணம் J.P.**

**திருமதி S.செல்வரட்ணம்**

(Retired Matron, Teaching Hospital, Jaffna)

ஆகியோரது

புதல்வன் செல்வன் **S.பார்த்தீபன்** அவர்களுக்கும்

செல்வி **K.சிந்துஜா** அவர்களுக்கும்

லண்டனில் இன்று (20.10.2002) நடைபெறும் திருமண வைபவத்தை முன்னிட்டு மணமக்கள் சகல செல்வங்களும் பெற்று, சிறப்புடன் வாழவேண்டும் என்று நிர்வாக உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள், ஊழியர்கள் அனைவரும் வாழ்த்துகின்றோம்.

கோப்பாய் லயன்ஸ் கழகம்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
*கோப்பாய்ப் பிரிவு.*

(9694)

---

## பாடசாலைத் தினமும் பரிசளிப்பு விழாவும் - 2002

**யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

காலம் : 21.10.2002 திங்கள்
நேரம் : 9.30 மணி
தலைவர் : திருமதி இ.குலவீரசிங்கம் *(உப அதிபர்)*
பிரதமவிருந்தினர் : கலாநிதி அ.சோமசுந்தரம்பிள்ளை *(பட்டயக் கணக்காளர்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பாடசாலைச் சமூகம்.

(9693)

---

**JOHN KEELS** ஸ்தாபனத்தாரின்

CHICKEN SAUSAGES
MEAT BALLS
PORK SAUSAGES
BACK BACON
FISH FINGER
CHICKEN DRUMSTICKS
FISH CHINESE ROLLS
BEEF BURGER
VEGETABLE CHINESE ROLLS

போன்றனவற்றை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் சுத்திகரிக்கப்பட்ட
**BROILERS 1kg: 180 |=** தோல் அகற்றப்பட்டது **1kg: 200 |=**.

வரணி, மிசன் பண்ணை விற்பனை நிலையம்,
145, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,
T.P2222868

(9673)

---

## ஆசிரியர் வெற்றிடங்கள்

ஆண்டு 3முதல் 11வரை சகல பாடங்களிற்கும் ஆசிரியர் தேவை. 20, 21ஆம் திகதிகளில் மாலை 5 மணிக்கு ஆவணங்களுடன் நேரில் சமுகந்தரவும்.

அதிபர்,
நியூட்டன் அக்கடமி,
(9699) அரசடிப்பிள்ளையார் கோயிலடி, கோண்டாவில்.

---

## யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்
### கரவெட்டி

## நூற்றாண்டு நிறைவு விழாவும் (1901 - 2001) பரிசளிப்பு விழாவும்

*காலம்:* 2002.10.21 திங்கட்கிழமை பி.ப. 2.00 மணி.
*இடம்:* முதலியார் சின்னத்தம்பி மண்டபம்.

பிரதம விருந்தினர்

**பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி**

*(பழைய மாணவர்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

- பாடசாலைச் சமூகம்.

(9696)

---

## மரண அறிவித்தல்

### கலாநிதி வயித்திலிங்கம் கனேசலிங்கம்

இருபாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவரும் திட்டமிடல் அமைச்சு, கோலாலம்பூர் ஐநா.திட்டம், ஹொங்கொங், சீனப் பல்கலைக்கழகம், மார்க்கா நிறுவனம் ஆகியவற்றில் பதவி வகித்தவருமாகிய கலாநிதி வயித்திலிங்கம் கனேசலிங்கம் அவர்கள் ஒக்ரோபர் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் - ஞானவல்லி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், கார்த்தியாயினி, குகப்பிரியை, உமாமகேஸ்வரன், சந்திரமோகன், மதன்மோகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகேந்திரா, ஜெகசோதி, இந்துமதி ஆகியோரின் மாமனாரும் துளசி, அகிலா, யாழினி, நடனி, கார்த்திக் ஆகியோரின் அருமைப் பாட்டனாரும் காலஞ்சென்றவர்களான பராசக்தி தியாகராஜா, வ.குமாரசுவாமிக்குருக்கள்(மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆதீன கர்த்தா), வைரவலிங்கம்(ஓய்வுபெற்ற அதிபர்), விணாவாத விதுசனி, கனகசபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.10.2002 புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலாநிதி வ.கனேசலிங்கம் வளவு,*
*இருபாலை கிழக்கு, கோப்பாய்.* (C/24348)

தகவல்: பேரமக்கள், மருமக்கள்.

---

## சமுர்த்திக் குழு அமைப்பு

கொடிகாமம்,ஒக்.20

எழுதுமட்டுவாழ வடக்குப் பிரதேசத்தில் 40 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளதையடுத்து அப்பகுதியில் சமுர்த்திச் சிறுகுழுக்கள் கடந்த வெள்ளிக்கிழமை அமைக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.விமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியிலிருந்து யுத்தத்தினால் மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-ரி)

---

## ENGLISH CLASSES

By:
**THENPULOLYUR**
**K.C.Sivasubramaniam**
*(Veteran English Teacher)*

**GRAMMAR / LITERATURE / TOFFEL / ILTS**

(C-24327) **51, 1st Lane, off Brown Road, Jaffna.**

---

உ
சிவமயம்

## இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்

## புதிய தலைமைக் காரியாலயப் புகுவிழா

காலம் : ஐப்பசி 03ஆம் நாள் (20.10.2002) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : முற்பகல் 9.00 மணியளவில்
இடம் : இல.51, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

எனும் முகவரியில் சகலவித மங்கலப் பொலிவுகளுடன் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. தங்களை இந்நிகழ்ச்சியில் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதனைத் தொடர்ந்து... *அருள் ஒளி*

## கீர்த்தனை நூலும், ஒலிப்பதிவு நாடாவும் வெளியீடு

*நூல் ஆக்கியோன்* : கவியோகி, அருட்கவி சீ.விநாசித்தம்பி *M.A*
*பாடியவர்* : மலேசியா வாசுதேவன்
*இடம்* : *நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்*
*காலம்* : 20.10.2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணி

### நிகழ்வுகள்

- மங்கள வாத்தியம் : ரஜீவன் குழுவினர் - நல்லூர்
- தேவாரம் : பிரசங்கபூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தி அவர்கள்
- வரவேற்புரை : லயன் த.சற்குணராசா அவர்கள் (சீமாட்டி)
- ஆசியுரைகள் : ★ சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P. அவர்கள்
- தலைவர் : ★ பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்
  கலைப்பீடாதிபதி யாழ்.பல்கலைக்கழகம்
  ★ மகாவித்துவான் முத்தமிழ்ச்சுரபி ஸ்ரீ ந.வீரமணி ஐயர் M.A. அவர்கள்
- சிறப்புரைகள் : ★ புதுவை இரத்தினதுரை அவர்கள்,
  கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப் புலிகள்
  ★ தி.மகேஸ்வரன் அவர்கள்
  கௌரவ அமைச்சர் -- இந்து கலாசார விவகாரம்
- ஒலி நாடா : **வெளியீடு**
- பிரதம விருந்தினர் உரையும்
  நூல் வெளியீடும் : பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
  துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்
- சிறப்பு விருந்தினர் உரை : பேராசிரியர் இ.குமாரவடிவேல் அவர்கள்
  விஞ்ஞானபீடாதிபதி ~ யாழ்.பல்கலைக்கழகம்
- பாட்டு : செல்வி தனுசொரூபி நவரத்தினம்
- வயலின் : இசைமாமணி செல்வன் ம.ரதீஸ்குமார்
- மிருதங்கம் : செல்வன் லோகேந்திரன் மகேந்திரன்
- ஆய்வுரை : பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள்
  தலைவர், நடனத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்
- பாட்டு : இசைமாணி செல்வன் தவநாதன் றொபேட்
- வயலின் : இசைமாணி செல்வன் ம.ரதீஸ்குமார்
- மிருதங்கம் : செல்வன் சு.கமலதாஸ்
- மதிப்பீட்டுரை : கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளை அவர்கள்
  ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி (சங்கீதம்)
- பாட்டு : கலாவித்தகர் செல்வி வரதவாணி திருச்செகநாதன்
- வயலின் : இசைமாணி செல்வன் ம.ரதீஸ்குமார்
- மிருதங்கம் : கலாவித்தகர் செல்வன் T.வரோதயன்
  நூலாசிரியர் உரை
- பாட்டு : சாகித்திய இசைப் பேரரசு தேவகானவாரிதி நா.வி.மு.நவரத்தினம், M.Phill அவர்கள் தலைவர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்
- வயலின் : இசைஞானதிலகம் திரு.உ.ராதாகிருஷ்ணன்
- மிருதங்கம் : கலைஞானச் சுடர் திரு S.மகேந்திரன்
- நன்றியுரை : திரு.சி.சக்திக்கிரீவன்
  கௌரவ செயலாளர், யாழ்.இந்துசமயப் பேரவை

**நடனம்**

- நடன ஆக்கம்
- நட்டுவாங்கம் : நுண்கலைமாணி கலாவித்தகர் திருமதி ஆனந்தஜோதி ஸ்ரீதர்சன்
  விரிவுரையாளர், நடனத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்
- பாட்டு : இசைமாணி திரு. வி.ஸ்ரீதர்சன்
  விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்
- மிருதங்கம் : கலைஞானச்சுடர் திரு S.மகேந்திரன்
  விரிவுரையாளர், நடனத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்
- வயலின் : செல்வி பாக்கியலட்சுமி நடராசா M.Phil. அவர்கள்
  சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்
- நடன பாத்திரங்கள் : செல்வன் மகேந்திரன் தவேந்திரன் (B.Sc.)
  செல்வி விதுபா பாலசுந்தரம்
  செல்வி சதாஜினி பொன்னம்பலம்
  செல்வி மயூரி குணநாதன்
- தேவாரம்

(C/24344)

விளம்பர அன்பளிப்பு:

சீமாட்டி (புடவைக் கடல்) 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2222196

அசோகா ஜுவலறி 275, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

லிங்கன் ஜுவல்லர்ஸ் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.